[Regd]. No. M. 2210
வருஷ சந்தா ரூ

[AU]THOR & PROPRIETOR
வை. மு. கோதைநாயகி அம்மாள்
(Mrs. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 12



[ஜக]ன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி அணா 3.

JL
N30.7.12.

... தமும ... சித் தேதியில் சஞ்சிகை வெ...

எட்டாவது ஆண்டு ! எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரூ. 1-8-0 தான். "**சாமளநாதன்**" சென்ற வாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 அணா கூடச் சேர்த்து ரூ. 2¼ அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் **அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் **வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) **நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையும் இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

மானேஜர்.

நமது "மோகினி" யின் அன்பார்ந்த நேயர்கட்கு

சென்ற 11-வது இதழிலுள்ள விண்ணப்பத்திற்கிணங்கி நமது சந்தா நேயர்களில் பலர் தமது சந்தாத் தொகையுடன், தமது நேயர்களின் சந்தாவையும், **ருக்மிணிகாந்தனின்** விலையையும் சேர்த்தனுப்பியதற்காக எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றுமுள்ள சந்தா நேயர்களும் அவ்விதமே உதவி புரிந்து எமக்கு உற்சாகத்தை புண்டாக்குவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

எதிர் பாராத காரணத்தினால் நாம் தெரிவித்த தவணையில் ருக்மிணிகாந்தன் வெளிவரத் தவறிவிட்டது. மேலும் வெளியூரில் பிரசுரமாவதால் தாமதம். இத்தாமதத்திற்கு பணமனுப்பிய நேயர்கள் மன்னிப்பார்களாக. கூடிய சீக்கிரத்தில் புத்தகம் வெளியாகக்கூடிய ஏற்பாட்டைச் செய்து வருகிறோம்.

வழக்கம்போலவே, புதிய ஆண்டின் சந்தாவை நமக்கு நேரிலோ, நமது கௌரவப் பிரதிநிதிகளிடமோ, ஏஜண்டுகளிடமோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். ஏற்கெனவே தெரிவித்தபடி புது ஆண்டிலும் **"சாமளநாதன்"** தொடருமாதலால் அடுத்த சஞ்சிகை சந்தா செலுத்தியவர்களுக்கு மட்டும் அனுப்பப்படும். ஆகையால் எல்லா நேயர்களும் டிசம்பர் மீ 20-தேதிக்குள் சந்தாவை அனுப்பி பரிசுப் போட்டியில் சேருவார்களென்று நம்புகிறோம்.

பழைய சந்தாதார்கள் பணமனுப்பும்போது மணியார்டர் கௌபனில் தங்களது சந்தா நம்பரை மறக்காமல் குறிப்பிட வேண்டுகிறோம்.

மானேஜர்

DON'T FAIL TO READ

THE MOVIE MIRROR

The Cinema Magazine of merit with the largest circulation. The only one of its kind in South India.

Containing the latest comment pictures, criticism and news concerning Indian pictures, reviews and personalities.

Carries more Producer, Distributor advertising matter than all other Cinema Film Papers combined.

THERE MUST BE A

Reason.....................

For Rates & Subscription Apply:

THE MOVIE MIRROR

POST Box 1205. G. P. O.

MADRAS.

1931 புதுவருஷப் பதிப்பு. 1931

"ஸ்ரீ வித்யா"

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட்,

பிஸினஸ், பாபுலர் & ஸ்பெஷியல்

டைரிகள்

தென் இந்தியா முழுவதும் நன்கு
மதிக்கப்பெற்றன.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

பப்ளிஷர்ஸ்:—

ஸ்ரீ வித்யா பிரஸ்,

கும்பகோணம்.

(தென் இந்தியா).

நியூ இந்தியா
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.,

வட ஆர்க்காடு; கோயம்பத்தூர், நீலகிரீஸ்,
தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களுக்கு
செல்வாக்கும், ஊக்கமும் வாய்ந்த ஏஜெண்டுகள்
உடனே தேவை.

லைப் இலாகாவில் கம்பெனி அளிக்கும் வசதிகளாவன:—

பாலிஸிதார்களுக்கு:—

[1] தானாகவே கிடைக்கும் பறிமுதல் செய்யப்படாத உரிமை, [2] நீடித்த கால அஷியூரன்ஸ், [3] கஷ்டகாலத்துக்கான சாசுவத அனுகூலங்கள், [4] எதிர்பாராத சம்பவத்தால் மரணமேற்படுவதற்கு இரண்டு பங்கு தொகை அளிக்க உறுதி கூறப்படுவது, [5] ராஜீயக் குற்றத்துக்காகச் சிறை செல்லும் பாலிஸிதாரர்களுக்கு அவர்கள் சிறையிலுள்ள வரையில் பிரத்யேக ஏற்பாடுகள்.

ஏஜண்டுகளுக்கு:—

[1] தாராளமான கமிஷனும், போனஸும், [2] மீண்டும் தொடக்கப்படுவதற்குச் சாசுவதமான கமிஷன், [3] கம்பெனியுடன் நேரான சம்பந்தம்.

நெருப்பு, கப்பல் விபத்து, மோட்டார் விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்கட்கும் ஏஜன்சிகள் கிடைக்கும்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்
பிராஞ்சு மானேஜர்.

4—5, முதல் லைன் பீச்,
மதராஸ். 26-10-30

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும், பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¼ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8.0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¼ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¼ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0.1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

9-வது அதிகாரம்.

உண்ட வீட்டிற் இரண்டகம் நினைக்கும் சண்டாளன்

210027.

அண்ணாசாமியின் மோசத்தை யறிந்து வியாஜ்யம் நடத்தியதில், அவன் ஏற்கனவே விழுங்கிவிட்ட பொருளையும் சேர்த்துக் கொடுக்கும்படி நேர்ந்துவிட்டதால் அவன் பாபர் சமஸ்தானாதிபதி யாகிவிட்டான். அவன் குழந்தைகளும் உண்ணவும் உணவின்றி நிரம்பவும் தாரித்ரிய திசையை அடைந்தார்கள். அவனுக்கு உத்தியோகமும் போய்விட்டதால் பிழைக்க யாதொரு வழியுமின்றித் தவிக்கலானான். வெகு வியசனத்துடன் "எந்த வழியில் இனி பிழைக்கலாம்?" என்கிற பெரும் ஏக்கம் அவன் மனத்தில் குடிகொண்டு வேலைசெய்ய வாரம்பித்தது. பட்டினியும் பசியும் அவனை வாட்டி வதைக்க வாரம்பித்தன. குழந்தைகள் படும் கஷ்டங்களைக் கண்டு சகிக்க முடியவில்லை. ஆகையினால் வெகுவாக யோசித்துப் பின் சாமளா பிலிம் கம்பெனி அதிகாரியிடம் சென்று முகஸ்துதியாகப் பேசி அவனை வசம் செய்துகொண்டு அந்தக் கம்பெனியில் தானும் தனது குழந்தைகளுமாகச் சேர்ந்துவிட்டான். 'அடாது செய்தார் படாது படுவர்' என்னும் முதுமொழிக்கு அண்ணாசாமி ஒரு அரிய உதாரணமாக அமைந்தான்.

சுலோசனா சினிமாவில் சேர்ந்திருப்பதாகத் தான் கேள்விப்பட்டதாக அவளிடம் கூறிக் கண்டித்து அவள் புண்பட்ட மனதில் நெருப்பை நுழைப்பதுபோலச் செய்த அவன், தன் குடும்பத்துடன் இப்போது ஜீவனத்திற்கு ஆதாரமான நிலைமையில் அதே சினிமாவில் நடிக்கும்படியாகக் கடவுள் செய்துவிட்டார். "கலியிற்

எதையும் கணக்குடன் செலவு செய்தால் அதன் மாதிரி வேறுதான். கண்மூடித்தனமாகச் செய்தால் அந்த வழி வேறுதான். கணக்கிருப்பதன் குணம் ஓர் தனித்த மணமே யாகும்.

கூலி கைமேலே" யல்லவா? பிறரைப் பழித்து நகைபாடி அவர் மனதைப் புண்படுத்தும் எந்த மனிதரும் வெகு சீக்கிரத்தில், தாம் எவரைப் பழித்தார்களோ அவர்கள் நிலைமையைத் தாமே அடையும்படி கடவுள் செய்துவிடுகிறார். அனேக இடங்களில் பல மனிதரிடத்திலும் இவ்விதமான நிகழ்ச்சிகளை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். கருப்பாயுள்ள குழந்தைகளையும், பெரியாரையும் பழித்துத் தூஷிப்பவர்களுக்கே கடவுள் அதிலும் கருப்பான குழந்தைகளைக் கொடுத்துவிடுகிறார். இவைகள் தாம் கடவுளாட்சியின் விநோதம்! சுலோசனாவைத் தான் அகாரணமாகக் கண்டித்ததை மறந்து, வயிற்றை வளர்க்கும் பொருட்டுத் தானே அக்கம்பெனியில் நடிகனாகிவிட நேர்ந்த குற்றத்தை அவன் மனமறிந்ததா! இல்லை! இல்லை! சாமளா பிலிம் கம்பெனியார் சுலோசனாவின்மீது கொண்ட ஆசையை இன்னும் விட்டொழித்தார்கள் இல்லை. அவளை எவ்வழியிலேனும் சரிப்படுத்தித் தமது கம்பெனியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்கிற ஓர் தீவிரமான ஆசை நீங்காமல் அவர்கள் மனதில் ஒரு புறம் வேலை செய்துகொண்டே இருந்தது. அண்ணாசாமி நடிகனாகச் சேர்ந்ததை அவர்கள் பெரும் பாக்கியமென்றே எண்ணினார்கள். அண்ணாசாமி சுலோசனாவின் போஷகனாயிருந்ததை கம்பெனியார் அறிவாராதலின் 'சிறு மீனைவிட்டுப் பெரிய மீனைப் பிடிப்பது' போல அவனைக் கொண்டு சுலோசனாவை தம் கம்பெனியில் நடிப்பதற்காக வரவழைத்து விடுவதென்று தீர்மானித்து அண்ணாசாமியிடம், வெகு நேச பாவங் கொண்டார்கள். அவனிடம் அவன் குடும்ப விஷயமாயும் பிறகு சுலோசனாவைப் பற்றியும் பேச ஆரம்பித்து அவனிடமிருந்து சகலமான விஷயங்களையும் கிரகித்துக் கொண்டு "சுலோசனாவால் உமது குடி முழுகிவிட்டதன்றோ? இனி மேல் அவளை நீர் சும்மா விடுவது அழகல்ல. அவளை நீங்கள் எவ்விதமாவது அபகரித்துக்கொண்டு வந்து விட்டால்தான் உங்களுக்கும் பழிக்குப் பழி வாங்கியதாகும்; எங்களுக்கும் ஒரு

அன்யோன்யமான சிநேகிதர்களைப் பிரியுங் காலத்தில் மனம் தத்தளிக்கின்றது. உண்ணும் உணவும் தேகத்தில் ஒட்டுவதில்லை. சதா ஏக்கமும் கவலையும் மனத்தில் குடிகொள்கின்றன.

பெரிய "காரியம் கைகூடும்' என்று கூறி அவனுக்கு தூபம் போட்டார்கள்.

அன்னுசாமி என்னும் பேய் அந்த தூபத்தைக் கண்டு நன்ருக ஆடத் தொடங்கி விட்டதால் "சுலோசனுவை எவ் வழியிலாவது அபகரித்து விடுவதே சரி! அவளை இங்குக் கொண்டுவந்து விட்டால் பிறகு நாமே விவாகமும் செய்துகொள்ளலாம்" என்னும் ஆசைக் கயிற்றினுல் அவனுடைய பம்பரம் ஆடத் தொடங்கியது. அவ்வாறே தான் செய்வதாகக் கம்பெனியாரிடம் தெரிவித்து விட்டான். அன்னுசாமியைக் கொண்டே தங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளலா மென்றெண்ணி கம்பெனியார் அவனுக்கு வேண்டிய அளவு பணத்தைக் கொடுத்து உற்சாகப் படுத்திக் கொண்டே வந்தார்கள்.

காவேரி என்கிற கொள்ளி ஏற்கனவே கணவனுல் விலக்கப் பட்ட வாழாவெட்டி யென்பதை நாம் கூறியது நினைவில் இருக்கலாம். அந்த பைசாசத்தின் மிதமிஞ்சிய துர்க்குணத்தினுல் அவளுடைய பெற்றோருக்கும் அவளிடம் மிக்க வெறுப்பு உண்டாய் விட்டது. அவளுடைய வாயாடித்தனத்தால் உடன் பிறந்த அண்ணனுக்கும் அவளுக்கும் அடிக்கடி சண்டையும் பூசலுமாக விருந்தது. அவளுடைய போதாத காலத்தின் கொடுமையினுல் அவளுடைய பெற்ரோர்களும் கொஞ்சகாலத்திற்குள் கால கதி படைந்து விட்டார்கள். காவேரியின் அண்ணனும் அவன் மனைவியும் இவள் செய்யும் துஷ்கிருத்யங்களைக் கண்டு சகிக்கமாட்டாது வாய்க்கு வந்தவாறு நிந்திக்க வாரம்பித்தார்கள். காவேரியின் அண்ணன் சென்னையிலேயே வேலை பார்த்துக்கொண்டிருந்தான்; ஆகையால், காவேரிக்கும் சென்னையே வாசஸ்தானமாகி விட்டது.

தீபாவளிப் பண்டிகையில், அந்த இன்பகரமான உதயத்தில் எங்கும் மங்கள வாத்ய முழக்கம்; படாஸ் வெடிகளின் பேரொலி; மத்தாப்பு வகைகளின் பிரகாசம்; குழந்தைகளின் ஆரவாரம்: புதிய வஸ்திரமணிந்த மக்கள் செல்லும் காட்சி ஆகிய யாவும் ஒன்று கூடி மிகுந்த ஆநந்தத்தை அளிக்கின்றன.

பெங்களூருரிலிருக்கும் சாமளா பிலிம் கம்பெனியார் சென்னையில் ஒரு கிளைக் கம்பெனி புதிய படங்கள் பிடிப்பதற்கும், படக்காட்சி நடத்துவதற்கும் ஏற்பாடு செய்து விட்டார்கள். அந்தக் கம்பெனியிலேயே அண்ணாசாமி நடிப்பதற் கமைந்து சென்னைக்கு வந்துவிட்டான். அவ்வாறு சென்னைக்கு வந்ததும் காவேரியின் சிநேகம் அண்ணாசாமிக்கு அதிகமாகி விட்டது. "சுலோசனாவினால் தான் எனக்கிந்த கதி நேர்ந்துவிட்டது. அவளை நான் பழி வாங்க எண்ணி இருக்கிறேன்" என்று அண்ணாசாமி தன்னுடைய பெருமையைக் கூறிக்கொண்டதைக் கேட்ட காவேரிக்கு அது விஷயத்தில் மிக்க திருப்தி யாகையினால் அவள் தானும் அவ்விஷயத்தில் உதவி செய்வதாக வாக்குறுதி செய்து கொடுத்தாள்.

அண்ணாசாமிக்கும் காவேரிக்கும் மிக்க ஒற்றுமை யேற்பட்டுக் கள்ள நட்பும், தீயவொழுக்கமும் உண்டாகிவிட்டது. இதனை யறிந்த அவளுடைய அண்ணன், அவளை இனித் தன் வீட்டிலிருக்க விட்டால் அபகீர்த்தி ஏற்பட்டு விடுமென்று கடிந்து பேசி, வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். அண்ணாசாமி காவேரியையும் தான் நடிக்கும் சினிமாவில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டான். இருவரும் மிக அன்யோன்யமாய் ஏகபோகமாகச் சந்தோஷமாய் வாழத் தொடங்கினர். அந்த துஷ்டையான காவேரிக்கு, தான் முன்னர் சுலோசனா விஷயத்தில் சினிமாக்காரனிட மிருந்து ஒரு துண்டுக் கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுத்துத் தன் தலைக்கே ஆபத்தைத் தேடிக்கொண்ட சம்பவங்கள் யாவும் அறவே மறந்தொழிந்தன. தனது அப்போதைய தனியாட்சியையே பெரும் பேறாக எண்ணி நடித்தும், அண்ணாசாமியுடன் நட்புக் கொண்டும் இறுமாப்புடன் இருக்கலானாள்.

* * * *

உளறுவாய் ஆசாமிகளைச் சற்று கடிபிடி செய்து விட்டால் உளறல் இன்னும் அதிகமாகி விடுகின்றது. பேசுவது இன்னதென்று புரியாமலிருப்பதை வேடிக்கையாகச் சிலர் பார்க்கிறார்கள். ஐயோ பாவமென்று சிலர் கூறுகின்றார்கள்.

இது இங்ஙனமிருக்க, நமது சுலோசனைவிடம் வந்த பரிமளா வின் தாயாரும் அத்தையும், சுலோசனை தம்முடைய வார்த்தைக ளால் திடுக்கிட்டு நிற்பதைப் பார்த்து மனமிளகாமல் மேலும் பேசத் தொடங்கி "என்ன நாட்டியங் காட்டுகின்றாய்! பேஷ்! சினிமாவில் நடிக்கும் உனக்கு இது ஒரு பெரிய காரியமா என்ன? அதொன்று மில்லை. நாங்கள் சொல்லிய வார்த்தைகளை இன்றுதான் புதிதாகக் கேட்பதுபோன்று ஏன் நடுங்குகின்றாய்? உனது காரியங்களும் விஷயங்களும் எங்களுக்குத் தெரியாதா? என் குழந்தையின் வாழ்வில் மண்ணைப் போடுவதற்காக நீயொருத்தி இருப்பதை நாங்கள் முன்னமே அறிந்திருந்தால் எங்கள் அருமைக் குழந்தையை அவ்விடத்தில் கொடுத்திருக்கவே மாட்டோம். எங்கள் போதாக் காலமே அவ்விடத்தில் சம்மந்தம் செய்யும்படி செய்துவிட்டது. கல்யாண காலத்திலேயே உன்னுடைய தளுக்கையும் அந்த மனித ருடைய மினுக்கையும் நான் பார்க்கவில்லையா? அப்போதே எனக் குச் சந்தேகந்தான். அவ்வாறு நான் சந்தேகித்தது உண்மையாகி விட்டது. என் குழந்தை படும்பாட்டை நினைத்தால் என் வயிறு எரிகின்றது. என் வயிற்றெரிச்சலால் நானிடும் சாபம் வீணாகப் போகுமா? ஒன்றுக்கும் உதவாத அமங்கலியாகிய உனக்கே இத் துணை ஆடம்பரங்கள் வேண்டுமென்றால், எல்லாவற்றிற்கும் உரியவ ளாகிய என் குழந்தைக்கு இன்னும் எவ்விதமான வைபோகம் வேண்டியிருக்கும்? நீ இத்தகைய அக்கிரமம் செய்வதால் உனக் குள்ள பாபத்தை உணராமல் நீ என்ன படிப்புப் படிக்கிறாயடி! உனக்கு இந்த அநியாயத்தினால் ஒருவிதமான தீங்கும் அணுகாம லிருக்கும்பொருட்டுத்தான் முன் ஜாக்கிரதையாக டாக்டருக்குப் படித்துவிட்டாய்போ லிருக்கிறது." என்று அவர்கள் வாயில் வந்த வாறு கூறுவதைக் கேட்டு மனம் சகியாமல் துடித்து உருகும் சுலோசனை, ஹோவெனக் கதறியவாறு அவ்விருவர்களின் முன்னிலை

கடன்கொடுத்த பொருளைத் திருப்பிக் கேட்பதற்கே சிலர் அஞ்சுகின் றார்கள். சில பேர்வழிகளோ வாங்கிய கடனைத் திருப்பிக் கொடாமலேயே மீண்டும் மேன்மேலும், வெட்க மின்றி வாங்க வந்துவிடுகிறார்கள். இதென்ன சுபாவமோ?

யில் விழுந்து நமஸ்கரித்து, "அம்மா! தாங்கள் பெரியவர்கள்; நானே கேவலம் இளையள். தங்களுடைய வாயினால் இத்தகைய மொழிகளைக் கூறுவது சிறிதும் பொருத்தமானதாகாது. நான் ஒரு பாபமும் அறியாத—குற்றமற்ற—நிரபராதி என்பதைக் கடவுளே அறிவார். அவரும் உங்களைப்போல மூடத்தனமாக இருக்கமாட்டார். என்மீது வீணாக இத்தகைய அபாண்ட வார்த்தைகளைக் கூறுவதைக் கேட்ட என் வயிறு எரிகின்றது. இது கடவுளுக்குப் பொறுக்கவே பொறுக்காது. உங்கள் குழந்தையின் வாழ்வில் நான் பங்குதாரியாகிவிட்டேனென்று நீங்கள் கூசாமல் கூறும் வார்த்தைகளைக் கேட்க, என்னிதயம் வெடித்துவிடும்போ லிருக்கின்றது. கேவலம் பரதேசியாகிய என்னைக் கண்டு நீங்கள் இவ்விதம் கூறுவது சற்றும் அடுக்காது." என்று சுலோசனா கூறி முடிக்குமுன்னர், மீண்டும் பரிமளாவின் தாய் பேசத்தொடங்கி "போதுமடி உன் வீண் பேச்சு. கைப்புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமோ? உன் மோக வலையிற் சிக்கித்தான் அந்த மனிதன் முழுகிவிட்டானே! அவனுடைய படித்த அறிவானது உன்னால் மழுங்கிப்போய்விட்டதே! கிளிபோன்று வளர்த்த என் குழந்தையை பூனைபோன்ற அவனிடம் கொடுத்து வயிறெரிகின்றேனே! நீ ஒருத்தி இருப்பதை யறியாமல் மோசம் போனேனே! என் வயிற்றெரிச்சலை நான் யாரிடம் போய் முறையிடுவேன்?" என்று தடபுடலாக ஒப்பாரிவைத்துப் புலம்ப உட்கார்ந்துவிட்டாள். இடிபொலி கேட்ட நாகத்தைப்போல, இந்த அபிமாப வார்த்தைகளைக் கேட்டு மனந்தாங்காத சுலோசனா, அப்படியே பொங்கும் ஆத்திரத்துடன் தங்கப் பதுமையைப்போல நின்றுவிட்டாள். பின் ஒருவாறு தெளிந்து அவர்களை நோக்கி "அம்மா! என் விஷயத்தில் நீங்கள் இவ்விதம் கூறுவது பாக்கி இருந்தது போலும். உங்களுடைய மனதில் வீணான, தப்பிதமான எண்ணத்தை வைத்துக்கொண்டு அபிமாபமாய் ஒரு ஜீவனை வதை

கொடுக்கவேண்டிய பணத்தைக் கேட்டனுப்பினால் சிலர் 'இன்னும் மாற்றவில்லை; மாற்றிக் கொடுக்கிறேன்' என்பார்கள். 'இன்னும் புருஷன் வரவில்லை' என்பர் சிலர். தானே எடுத்துக்கொண்டு வருகிறேன் என்றுரைப்பர் சிலர். இம்மூன்று வித சாக்கும் தந்திரமே யன்றி காசு காலணா வருவதில்லை; ஆசாமியும் கண்ணில் படுவதில்லை.

செய்யாதீர்கள். நான் ஒருவிதமான குற்றமும் செய்தவளல்ல வென்பதை நானே பெருமையாகக் கூறவேண்டாம். நீங்கள் வேண்டுமென்று இவ்விதம் வசைப்பாட்டு பாடுவதற்குத்தான் இங்கு வந்தீர்களோ? அம்மா! உங்களை ஆயிரந்தரம் வந்தனம் செய்கிறேன். தயவு செய்து நீங்கள் எழுந்து செல்லலாம். என்னுடைய பக்கில் கடவுளிருக்கிறார். என்னை சிக்ஷிக்கவோ ரக்ஷிக்கவோ அவருக்குத் தெரியும். நான் வீண்பேச்சில் பொழுதைப்போக்க இஷ்டப்பட வில்லை. அநியாயமான அபவாதத்தை என் செவியில் போடவேண் டாம்." என்று கோபத்துடன் சற்றுக் கண்டிப்பாய்ச் சொன்னாள்.

அதைக் கேட்ட பரிமளாவின் தாய் "ஆமாமடி! நீ வீண் பேச்சில் ஏன் பொழுதைக் கடத்தவேண்டும்? உன் பொழுதையும் வேலைகளையும் சரியாகக் கணக்கு செய்துகொண்டல்லவா நீ படித் திருக்கிறாய். அறுத்த முண்டைக்குப் பெருத்த வாயும், நாகரிக சொகுசும், ஆடம்பர வாழ்வும், அழகு செய்யும் அலங்காரமும் செய்துகொண்டு குலுக்கும்படி எந்த சாஸ்திரமடி உனக்குச் சொல்லி இருக்கிறது? விதவை இருக்கவேண்டிய இருப்பை மீறி இப்படியெல்லாம் வாழ எந்த கடவுளடி உனக்குச் சட்டம் வகுத்தார்? என் குழந்தையின் குடியைக் கெடுப்பதற்கும் வயிறு பற்றி எரிவ தற்கும் காரணமாயிருக்கும்படி உனக்கு யாரடி உபதேசம் செய் தார்கள்?" என்று கூச்சலிட்டுப் பேசிக்கொண்டிருக்கையில் "போதும்; போதும்; நிறுத்து உன் அநியாய வசைப் பாட்டை நிறுத்து. உங்களுடைய கண் பார்வையை இன்னும் பெற்றிருக்க வேண்டு மாயின் இந்த நிரபராதியின் மீது ஏதும் பழி கூற வேண்டாம். கண் அவிந்துபோகும் காலம் நெருங்கிவிட்டால் பேசுங்கள்" என்கிற ஓர் குரல் வெகு ஆத்திரத்துடன் வந்தது. அதே க்ஷணத்

கூசாமல் புஸ்தகம் இரவல் வாங்கிக்கொள்வது ஒரு வேடிக்கை. அதைத் திருப்பி அனுப்பும்போது அப்புத்தகத்தின் உருவமே நமக்கு விளங்காவாறு ஏடு ஏடாகக் கிழித்தும் சில பக்கங்களைப் போக்கிவிட்டும் அனுப்பிவிட்டு இன்னும் புஸ்தகங்கள் அனுப்புங்கள் என்று ஜம்பமாக சொல்லியும் அனுப்புகிறார்கள். இதனுடைய நஷ்டத்தையும், கஷ்டத்தையும் அவர்கள் அறிவார்களானால் அவ் வாறு கேட்பார்களா?.

தில் கண்ணீர் சொரிந்த வண்ணமாக நிற்கும் நமது சுலோசனாவை இரு கரங்கள் இழுத்து அணைத்துத் தன் மார்புறத் தழுவிக் கட்டிக் கொண்டு "என் கண்மணீ! சுலோசனா! இந்த வீணர்களின், அநியாயக்காரர்களின் வார்த்தையை நீ கேட்டு வருந்தாதே. மதுவுண்ட மனிதர்கள் தமக்குள்ள அற்ப அறிவையும் போக்கிக் கொண்டு குடி மயக்கத்தினால்—வெறியினால்—"அடே! வீடு பறக்குது. இதோ இரண்டு வீடுகளும் முட்டிக்கொள்ளப் போவுது. அதோ ஆடுது; வீடு சுத்துது" என்று வாய்க்கு வந்தவாறு உளறுகிறார்கள். அவர்கள் உளறலைப் போன்று வீடுகள் சுற்றுகின்றனவா? குடி (குடும்ப சம்பந்தமான) வெறியாலும் மதியின்மையாலும் இவர்கள் உளறியதும் குடிகாரர்கள் பேசுவது போன்றதேயாகும். நீ சற்றும் வருத்தப்பட வேண்டாம்! நான் இங்கு நடந்தவனைத்தையும் கேட்டுக்கொண்டு தானிருக்கிறேன். இவ்வறிவிலாப் பேய்களின் கொழுப்பு எத்தனை தூரம் தான் செல்லுமோ பார்ப்போம் என்று நானும் இது பரியந்தம் பொறுத்தேன். நீ சிறிதும் கவலைப்படாதே! உனக்கு நான் முக்கியமா, அவர்கள் முக்கியமா!" என்று கூறிவிட்டு அவர்களை நோக்கி "ஹே! துர்ச்சனர்களே! உங்களை யார் இந்த வீட்டில் காலெடுத்து வைக்கச் சொன்னார்கள்? இவள் மகா உத்தமி என்பதை அறியாமல், முன் யோசனையில்லாமல் இங்ஙனம் வசை பாட நீங்கள் எப்படித் துணிந்தீர்கள்? இவளைப் பற்றிக் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உங்களை சும்மா விடாது. 'அறுத்த முண்டை' என்று இந்த நிரபராதியான பெண்ணைப் பார்த்துக் கேட்க உங்களிருவரின் மனமும் எப்படித் துணிந்தது?' 'ஐயோ! பாவிகளே! நீங்கள் முதலில் இவ்விடத்தை விட்டுப் போகின்றீர்களா, இல்லையா? இனிமேல் என் வீட்டிற்கும் வரவேண்டாம். உங்கள் பெண் இறந்து விட்டதாக எண்ணித் தலை முழுகி விடுங்கள். 'ஒரு பெண்ணை ஒருவனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்ட பின் அவளுடைய சுக துக்கம்

இரவலுக்குப் புஸ்தகங்களைக் கொடுத்து கஷ்டப்படுவதைவிட, கொடாமல் நிஷ்டூரப்படுவதே மேல். பொருளின் அருமை தெரியாதவர்களுக்கு எப்பொருளும் கொடுப்பதே கூடாது. அழகான—அருமையான—புஸ்தகங்களை எடுத்துக் கொடுத்துப் பின் கந்தகூளமாகத் திருப்பிப் பெறுகிற வயிற்றெரிச்சலை—சங்கடங்களை—சகிக்கவே கூடவில்லை.

களனைத்தும் அவளை மணந்தவனுடையதே யன்றி வேறு எவருக்கு மன்று. கேவலம் சாதுவாயும் குற்றமற்ற குணசாலியாயும் இருக்கும் அந்தம்மாளைப் பார்த்து 'என் மகள் வாழ்விற்கு நீ பங்காளி" என்று கேட்கிறீர்கள். சை! சை! நீங்கள் இனி இங்கு நிற்கவும் வேண்டாம்" என்று மிகுந்த ஆத்திரத்துடன் அழுத்த மாகக் கூறிய அம் மொழிகளைக் கேட்டு அங்கு உட்கார்ந்திருந்த வர்கள் திடுக்கிட்டு அங்கு வந்த உருவத்தை நோக்கினார்கள். சுலோசனாவும் திடீரென்று தோன்றி தன்மீது அனுதாபத்துடன் ஆதரவு பேசி தன்னை வந்து கட்டி யணைத்துக்கொண்டு இருப்பவர் யாரென்று அவ் வுருவத்தை உற்று நோக்கினாள். பார்த்ததும் அப் படியே ஸ்தம்பித்து ஆச்சரியத்துடன் நின்று விட்டாள். பேசுவ தற்கோ நா எழவில்லை; துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது.

அங்கிருந்தவர்கள் மீண்டும் ஆத்திரத்துடன் "இதென்ன ஆச் சரியமடி பரிமளா! உன்னுடைய நன்மையைக் கோரி நாங்கள் உனக்குப் பரிந்து பேசினால் நீயே இவ்விதம் எங்களுக்கு விரோத மாகக் கிளம்பிவிட்டாயே! உன்னை உன் கணவன் வைத்திருக்கும் வள்ளலுக்கு உனக்கு வாயும் வேண்டுமா! இந்தப் பாவியினாலல்லவா உன் வாழ்வு பாழாய் விட்டது. உன்னை அவன் குப்பையைப் போல் தள்ளி இந்த ஸ்திதியில் வைத்து இருக்கையிலேயே உனக்கு இவ்வளவு அகம்பாவம் இருக்கின்றதே! அம்மாடி நீ இன்னும் இருக்கவேண்டிய பதவியில் இருந்தால் இன்னும் எப்படி துள்ளு வாயோ" என்று சொல்லி முடிக்கு முன் பரிமளா குறுக்கிட்டுத் தடுத்து "உங்களை நான் மரியாதையாகச் சொல்லுகிறவரையில் நீங்கள் இதை விட்டுப் போகப் போகிறதில்லை. என்னுடைய வாழ் வைப் பற்றிய விசாரம் எனக்கே யன்றி உங்களுக்கில்லை. நீங்கள் அனாவசியமாகப் பேசினால், இனி என் பர்த்தாவின் கோபத்திற்கும்

இரவல் புஸ்தகம் வாங்க வரும் தந்திரிகளான குள்ளநரிகள் நம்முடன் பேசும் மாதிரியிலிருந்தே இன்று நமது புஸ்தகத்திற்கு ஏதோ போதாத காலம் வந்துவிட்டதென்று தெரிந்துவிடுகின்றது. அவ்விதம் தெரிந்தும் தடுக்கக் கூடாமல் நாம் கொடுத்து ஏமாறுவதுமட்டும் நிற்பதில்லை. இதென்ன வேடிக்கை!

ஆளாக நேரும். இந்தம்மாளை நீங்கள் அனியாயமாகச் சொல்லும் சொற்கள் வீண் போகா. இவர்களுடைய நல்ல குணத்திற்கு உலகமே மதிப்புக் கொடுக்கும்; நீங்கள் கொடுக்கவேண்டியது அனாவச்யம். என்னைப் பற்றி நீங்கள் இனிக் கவலை கொள்ளவேண்டாம். இந்த நிமிடம் முதல் நீங்கள் எழுந்து செல்லுங்கள்; இல்லையேல் மிகுந்த சங்கடங்களுக்கு ஆளாக நேரும். இந்தம்மாளால் நான் பிழைத்திருக்கிறேனென்று நினையுங்கள். இனி நீங்கள் என் வீட்டிற்கும் வரவேண்டாம். எழுந்து நடவுங்கள்" என்று வாய்க்கு வந்தவாறு பேசிக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தாள்.

அதற்குமேல் அவர்கள் எதுவும் பேசமாட்டாமல் பரிமளாவையும் கூட நிந்தித்துக்கொண்டே அவ்விடத்தை விட்டுப் போய் விட்டார்கள். பிறகு பரிமளா சுலோசனாவை நோக்கி "என் பிரிய சுலோசனா! நீ இந்த மூடாத்மாக்கள் கூறியதற்கு வருந்தப்படாதே. நான் மிக்க உரிமை பாராட்டிப் பேசுகிறேன். உன்னுடைய—உங்களுடைய—ரகஸ்யங்கள் முற்றும் எனக்கும் தெரியும். உன்னைத் தூற்றிக் குறை கூறவேண்டியவள் நான். நான் ஏதேனும் துச்சமாக சொன்னால் நீ வருந்த வேண்டியதுதான். உன்னை என்னுயிர் போன்று நான் பாவிக்கின்றேன். என் பர்த்தாவின் நிழல் நான். ஆகையினால் உன்மீது அவர் கொண்டுள்ள பிரியத்தை நானும் பின் பற்றவேண்டியது என் கடமை. இதுதான் சதியானவள் பதிக்குச் செய்யும் தர்மமாகும். உன்னுடைய முகதரிசனத்தைக் காணாத நாட்களில் என் பர்த்தா படும் வேதனை கூறற்பாலதன்று. அவர் பித்துப் பிடித்தவர் போலாகி விடுகிறார். சில சமயம் அபாரமான

சிலர் "இதென்ன! எனக்குப் புத்தகம் விலைகொடுத்து வாங்குவது பிரமாதமானதா என்ன! ஒருதரம் படித்துவிட்டால் அந்தப் புத்தகம் பிறகு எதற்கு? அதனால்தான் இரவல் வாங்கியே படித்துவிடுகிறேன்" என்று வாய் கூசாமல் சொல்லுகிறார்கள். அந்த புஸ்தகத்தை அச்சிட்டு வெளியிடுவதற்கான செலவையும், சிரமத்தையும் சிறிதேனும் அவர்கள் நினைத்துப் பார்த்தால் இவ்விதம் மூளைகெட்டப் பேச்சை உபயோகிப்பார்களா! இரவல் வாங்கியேனும் படிக்க வேண்டுமென்கிற வெட்கங்கெட்ட ஆவலை ஏன் கொள்ளவேண்டுமோ தெரியவில்லை.

கோபம் வந்துவிடுகின்றது. வீட்டில் பாரைப் பார்த்தாலும் சிள் சிள் என்று எறிந்து விழுகிறார். குழந்தைகளைக் கூட அவர் கவனிப்பதே இல்லை. என் விஷயத்தைப் பற்றி நான் கூறவேண்டியதே இல்லை. உன்னைக் காணும் சந்தோஷ நாளில் தான் அவர் என்னிடம் சகஜமாக இருக்கின்றார். அன்று தான் அவர் முகத்தைப் பார்ப்பதற்கு மனம் இசைந்து ஆவல் கொள்கின்றது. பூர்வ ஜன்மா வினையினால் ஒவ்வொருவரின் தலை எழுத்து ஒவ்வொரு விதமாக ஏற்பட்டுவிடுகிறது. சுலோசனா! இந்தப் பேய்கள் கூறியதை நீ பொருட் படுத்த வேண்டாம். அறவே மறந்து விடு. இதனால் எங்களிடம் மனஸ்தாபம் கொள்ளாதே. இவர்கள் கேவலம் ஒன்றுமே, அறிவே இல்லாத காட்டுப்புறத்துக் காட்டு மிராண்டிகள். இவர்கள் இவ்வாறு பேசினார்களென்பது என் பர்த்தாவுக்குத் தெரிந்தால் அதனால் பெருத்த கலகமும் அனர்த்தமும் விளையும். தயவு செய்து நீ இதை வெளியிடலாகாது. உன்னை நான் மிகவும் கேட்டுக்கொள்கிறேன். இங்கு நடந்த விஷயங்களை என் பர்த்தா அறிய நேர்ந்தால் எனக்குத் தான் முதலில் கஷ்டம். அவர் கோபத்திற்கு நானே முதல் இரையாக நேரும். இதை அவருக்குத் தெரிவித்துவிட வேண்டாம். அவர் இங்கு வரும்போது விபசனக்குறி எதையும், அவ் வக்கீலின் ஆராய்ச்சியிலேயே பழகியுள்ள கண்கள் கண்டுபிடித்துவிடும்படி காட்டிவிடாதே. நீ எப்போதுமிருப்பதற்கு மாறாக ஏதேனும் ஒரு சிறு துளி மாறுதலை உன்னிடம் அவர் கண்டுவிட்டாலும் உன் வாயை தனது இயற்கையானதும் தொழிற்பழக்கமுள்ளதுமான சாமார்த்தியத்தால் கிண்டிவிட்டுக் கண்டுபிடித்துவிடுவார். அந்த விஷயத்தில் நீ ஜயித்துவிட்டாலும், அவரும் மனக்கவலை படைந்து, அனுமானம் செய்ய ஆரம்பித்து

எந்த வஸ்துவானாலும் இரவல் கொடுப்பதே மகா பிசகு. எல்லாவற்றிலும் புஸ்தக இரவல் கொடுக்கவே கூடாது. இரவல் விழுங்கிப் பேய்கள்மூலம் பல புஸ்தகங்களும், கைகளும் மோசம் போய் ஏமாற்றமடைந்து குட்டுப் பட்டுத் தலை மொட்டையாகிவிட்டது. அவர்களின் கைப்பணம் அவரவர்களுக்கு வெல்லமாக இனிப்பதுபோல அவரவர்களின் பொருளும், உடைமையும், புஸ்தகங்களும் விலையிலா அமிர்தமாகத்தான் தோன்றுமென்பதை இரவல் வாங்கும் மனிதர்கள் சற்று சிந்திப்பார்களாக!

உன்னை நான்தான் ஏதோ சொல்லி புண்படுத்தி யிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பார். ஆகையினால் தயவுசெய்து நீ இவைகளை இப்படியே மறந்துவிடவேண்டும்." என்று மிகவும் இரக்கமாகக் கூறினாள்.

பரிமளாவின் அன்பான மொழிகளைக் கேட்ட உடனே சுலோசன அங்கு வந்தவர்கள், கூறிய சுடுசொற்களைக் காட்டிலும் கொடிய மொழிகளை மறந்து கண்ணீர் பெருக்கியவாறு "கணவன் மர்மத்தை மனைவி அறிந்திருப்பது சகஜமே. ஆகையினால் இந்தம்மாளுக்கும் அவருடைய விஷயங்கள் தெரிந்திருக்கின்றன" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு "அம்மா! தாங்கள் இவ்வளவு தூரம் எனக்குக் கூறவே வேண்டாம். என்னுடைய இந்த ஆபத்தான சமயத்தில் தாங்கள் வந்து காப்பாற்றியிராவிட்டால், என்னை அவர்கள் இன்னும் என்னென்ன சொல்வார்களோ, செய்வார்களோ! சமயத்தில் தாங்கள் புரிந்த பேருதவிக்காகவாவது நான் தங்களிடம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்விஷயங்களை என் வாயினால் நான் பிறருக்குக் கூறுவதில்லை. இதை உறுதியாக நம்புங்கள்" என்றாள். பின்னும் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து, பரிமளா வீட்டிற்குச் சென்றாள்.

அன்று நடந்த சம்பவங்களினால் மனம் நொந்து வியசனத்திலாழ்ந்த நமது நாரீமணியாகிய சுலோசன, ஒன்றும் தோன்றாதவளாய்த் தன் படுக்கையில் வந்து படுத்துவிட்டாள். அளப்பரிய எண்ணங்கள் அலை கடலை பொத்த அவள் மனதில் அலைகள் போலெழுந்தன. மிக்க கவலையோடு "ஆகா! இப்பாழும் பிறவி தொலையும் நாளை நான் என்று காண்பேனோ! இத்தனை நிந்தைகளையும் சகித்துக்கொண்டு என்னுவி எப்படி இன்னும் தங்கி யிருக்கிறது? ஒருவித குற்றமும் செய்யாமலிருக்கையில் என் தலைமீது இத்தகைய இடியினுங் கொடிய சொற்கள் விழவேண்டுமோ! ஹா!

சிலர் இரவலாக வாங்காமலேயே வேறு ஒரு மனிதர் மூலமாக நூலாசிரியர்களுக்குச் சிபார்சு கடிதமெழுதிக் குறைந்த விலைக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுப் பெறுகிறார்கள். புத்தகத்தையே விழுங்கிவிடும் பேய்களைவிட மேல் குறித்த தந்திரமே மேலானதாக இருக்கிறது.

முற்பிறப்பில் என்ன பாபத்தைச் செய்து இப்பிறவி பெடுத்தேனோ!" என்று கண்ணீர் விட்டு வருந்திக்கொண்டே இருக்கையில் கோபி நாதன் அவ்விடத்திற்கு வந்து தன் தமக்கை புலம்புவதைக்கண்டு மனம் மிகக் கலங்கிப்போய் அவளருகில் அமர்ந்து வெகு பிரியமாய் "அக்கா! நீ என் கண்ணீர் விடுகிறாய்! உனக்கு நேர்ந்ததென்ன? நீ கண்கலங்கினால் என் மனம் ஏதோ சங்கடம் செய்கின்றதே! எதற்காக நீ இப்பொழுது வருத்தப்படுகிறாய்?" என்று கேட்டான்.

தனது தம்பியின் வாஞ்சையைக் கண்டு ஆனந்தங் கொண்ட சுலோசனா தன் வருத்தத்தை உள்ளடக்கிக்கொண்டு "என் கண்ணே கோபி! உன் முகத்தைப் பார்க்கையில்—உன் இனிய மொழிகளைக் கேட்கையில்—எனக்குக் குறைவு என்ன இருக்கின்றது? ஒன்றுமே இல்லையப்பா! என் விதியை நினைத்து நான் துக்கித்தேனே யல்லாது மற்ற வகையில் ஒன்று மில்லை. நாம் பிறப்பதற்காக நம் தந்தை செய்த தவமென்ன! பட்ட பாடென்ன! அடைந்த கஷ்டமென்ன! இவற்றின் பலனாக நாம் பிறந்தும், நம் பெற்றோரைப் பேணாத பாவிகளாகிப் பறி கொடுத்துவிட்டோமே! நம்மால் அவர்கள் ஒருவித ஆனந்தமும் அடையவில்லையே! தவமிருந்து பெற்ற பலனால் அவர்கள் லாப மடையாமற் போனது போல், முதலில் பிறந்த நானும் ஒருவித லாபமும்—பயனும்—அடையாத பாவியாக ஜனித்துவிட்டேன். அவர்கள் உயிருடன் இருந்தாலும் இத்தகைய கஷ்டங்களைக் கண்டு சகிக்காமல் உயிர் நீத்தே யிருப்பார்கள். இந்த கஷ்டங்களை யெல்லாம் காணாமல் முன்பே நம்மைப் பிரிந்துபோனது ஒருவிதத்தில் நல்லதே. என் அன்பான கோபி! நான் இவ்வுலகத்தில் அன்று முதல் இன்று வரையில் உன் பொருட்டே உயிர் தரித்து வாழ்ந்து வருகிறேன். இல்லையேல் எனக்கு வேறுவிதத்தில் சந்தோஷமோ மன அமைதியோ உண்டா? இல்லவே இல்லை. என்னுடைய ஜீவன் நிலைத்திருக்கும் வரையில் வீணாகக் காலத்தைக்

சில தந்திரிகள் ஒரு புத்தகத்தை முதலில் விலை கொடுத்து வாங்கி விடுவதும் அதன் பிறகு தினம் தினம் வீட்டிற்கு வந்து நேச பாவத்தோடு பேசி மற்ற புத்தகங்களை இரவலாகவே பெறுவதற்கு வழி வைக்கிறார்கள்; பெற்றுக் கொண்டும் செல்கிறார்கள். ஏமாந்த சோணகிரியோ..............

கடத்தாமலிருக்கும் பொருட்டு இந்த மருத்துவத் தொழிலின் மூலமாக உலகத்தோருக்கு உதவி புரியும் நோக்கங் கொண்டு இத்துறையில் இறங்கினேன். உன்னுடைய பாசத்தினால் நான் எனக்குற்ற துன்பங்களை யெல்லாம் சகித்து வருகிறேனடா என் கண்ணே! நான் எதற்கும் உபயோகமற்றக் கட்டையாகி விடினும் உன்னுடைய முகத்தைக் கண்டு களிக்கும் ஒரு சிறிய பாக்கியமேனு மிருப்பதை எண்ணி மகிழ்வதொன்றே என் வாழ்நாளின் இன்பமாகும். உன்னால் என் துயரம் முற்றும் தீரும் பொருட்டாக உனக்கு விவாகத்தைச் செய்து உன் மனைவிக்கும் குழந்தைகள் பிறந்து என்னைக் கடைசி வரையில் களிக்கச் செய்து கரை எற்றிவிட்டால் போதும். அதைத் தான் நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினாள்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட கோபியின் மனம் உருகாதிருக்குமோ! தமக்கையின் கண் கலங்கியதும் அவன் நயனங்களும் நீர்த் துளிகளை யுதிர்க்க, அவன் குழந்தைப்போல் தேம்பி சுலோசனாவின் கரங்களைப் பற்றிக்கொண்டு" அக்கா! ஐயோ! உன் வார்த்தைகளைக் கேட்டு நான் சகிக்க முடியவில்லையே! என் மனம் தத்தளிக்கின்றதே! என்னை ஈன்ற அன்னை வேறாயினும், நான் எனது நினைவை

எல்லாவற்றையும் விட இது பெரிய வேடிக்கை. சிலர் முதலில் ஒரு புத்தகத்தை விலை கொடுத்து வாங்கிச் செல்வது. அதை வெகு விரைவில் படித்து முடித்துவிட்டு அன்றே அழுக்காகாமல் கொணர்ந்து 'இந்த புத்தகம் வேண்டாமென்று எங்கள் வீட்டில் சொல்கிறார்கள்; இதை எடுத்துக்கொண்டு வேறு கொடுங்கள்" என்று கேட்டு வேறு புத்தகத்தை வாங்கிக்கொண்டுபோய் இராவோடிராவாகப் படித்து முடித்து விட்டு காலையில் அதைக் கொண்டுவந்து "இந்த புத்தகத்தை நான் எற்கனவே படித்திருக்கிறேன்; இரண்டு பக்கங்கள் படித்ததும் கதை விஷயம் நினைவிற்கு வந்தது; ஆகையினால் வேறு கொடுங்கள்" என்று நிர்ப்பயமாக தந்திரம் செய்கிறார்கள். இரு புத்தகங்களையும் அவர்கள் இப்போதுதான் படித்தார்கள் என்பதைத் தெரிந்தும் வேறு புத்தகத்தை தாக்ஷிண்யத்திற்காகக் கொடுத்து தெரிந்தே எமாறவேண்டி யிருக்கின்றது. தந்திரமாக ஒரே கல்லில் மூன்று கனிகளை அடித்து விடுகிறார்கள் கொடுத்து வயிறெரிந்தவர்களோ!...............

பறிந்த நாளாக உன்னை பல்லவா எனது அன்னையாக பாவித்திருக்கிறேன். என்னாருயிர் அக்கா! நீ கண் கலங்கினால் என் மனம் கலங்கிவிடுகிறது. எந்த விதமாக உன்னை நான் சந்தோஷப் படுத்திப் பார்க்கலாமென்று என்னால் கூடிய வரையில் யோசித்தும் எனக்கு ஒருவிதமான வழியும் புலப்படவில்லையே! அக்கா! நான் ஒருவிஷயத்தைப் பற்றி உன்னிடம் வெகு நாட்களாகக் கூறவேண்டுமென்று நினைத்தும் பயந்து பேசாமலிருக்கிறேன். நான் அவ்விஷயத்தை உன்னிடம் கூறலாகுமா? நீ என்மீது கோபித்துக் கொள்ளமாட்டாயே!" என்று குழந்தையைப் போன்று கொஞ்சியும் கெஞ்சியும் கேட்டான்.

சுலோசனா:—என் அன்பான கோபி! என்னிடம் உனக்குப் பயமென்னடா! என் கண்ணே! என் பாழ் பிறவியில் எனக்குள்ள வாரிதியம் போன்ற உன்னையா நான் கோபிப்பேன். ஒருபோதும் கோபித்துக்கொள்ளமாட்டேன். நீ தாராளமாகச் சொல்லலாம். என்னால் கூடுமானதாயின் செய்கிறேன். இல்லையேல் பேசாமலிருக்கிறேன். அவ்வளவே பன்றி மற்றபடி பயப்படவேண்டாம். தைரியமாக எந்த விஷயமாயினும் கூறு.

கோபி:—அக்கா! இத்தனை நாளாக நான் சிறு குழந்தையாகவே இருந்தேன். உலகமே எனக்குத் தெரியாமலிருந்தது. என்னுடைய படிப்பும் வயதும் பெருக வாரம்பித்தபின்னரே உலக வியல்களைச் சிறிது சிறிதாகத் தெரிந்துகொண்டேன். இக்காலத்திலோ விதவா விவாகங்கள் கணக்கற்றவை நடக்கின்றன. அதைப் பத்திரிகைகளில் பார்க்கிறேன். விதவா விவாக சங்கங்களும் அங்கத்தினர்களும் அளவற்றிருக்கிறார்கள். கேவலம் தன் புத்தியே தனக்கேற்படாத குழந்தைப் பருவத்தில் விதவையாகப் போன உன் போன்றவர்க்கு ஏன் அக்கா விவாகம் செய்யலாகாது? உன்னைப் பார்க்குந்தோறும் நான் சிறியவனாக விருப்பினும் என்னை யறியாத

எந்த விஷயத்திலும் அவரவர்கள் அனுபவித்தால் தான் தெரிகின்றது. இரவல் வாங்க வருவோர்கள் தமது பொருளில் ஏதேனும் ஒன்றை அவ்வாறு கொடுத்து வயிறெறிந்திருப்பார்களானால் பிறர் பொருளைக் கேட்க ஒருபோதும் வரமாட்டார்கள்.

சங்கடங்களை அனுபவிக்கின்றேன்! விதவா விவாக இபக்கத்தில் என் மனம் மிகவும் ஈடுபட்டு அனுதாபங் கொண்டிருக்கிறது. சிறிய பால்ய விதவைகளுக்கு அவர்கள் இஷ்டப்பட்டால் அவர்களை மணக்கச் சம்மதிக்கின்ற பேர்வழிகளுக்குக் கட்டாயம் கல்யாணம் செய்துவிடலாம். ஐயோ பாவம்! அவர்கள் ஆயுட்காலம் வரையில் அநியாயமாக அழுது மடிவதென்றால் யாருக்குத்தான் மனம் உருகாது? அக்கா! நான் உன்னுடைய அனுமதியைப் பெறாமலே சில காரியங்களைச் செய்துவிட்டேன்; செய்து வருகிறேன். இதற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும். அக்காரியங்களாவன (1) நான் விதவா விவாக சங்கத்தில் ஒரு அங்கத்தினனாகச் சேர்ந்திருக்கிறேன். (2) என்னுடன் கூட மெடிகல் (வயித்திய) காலேஜில் படித்த ஆனந்தா என்னும் பெயருடைய உன்னைப் போன்ற உலக மறியாத பால்ய விதவையான கட்டழகி ஒருத்தியை நான் என் மனப் பூர்வமாகக் காதலித்திருக்கிறேன். அவளும் என்மீது தனது பரிசுத்தமான காதலைச் செலுத்தி இருக்கிறாள். எங்களிருவர் உயிரும் ஒன்றாகிவிட்டன. (3) நமது விமலநாத மாமா உன் மீது எத்தகைய அன்புகொண்டிருக்கிறா ரென்பதையும் உங்களிருவருக்குமுள்ள பரஸ்பரமான காதலையும் நானறிவேன். அவ்வாறறிந்ததால் என் மனம் மிக்கக் களிப்படைகின்றது. என்னை விமலநாதமாமா அடிக்கடி சந்திக்கும்பொழுதெல்லாம் உன்னைப்பற்றிப் பேசுவார். ஏதேதோ கேள்விகளைக் கேட்பார். அதற்கெல்லாம் நான் பதில் அளிப்பேன். நீயும் அவரும் அநேகவிடங்களில் சந்திக்கும்படியாக நேர்ந்ததெல்லாம் நான் செய்த வேலையே யாகும். இவ்வளவுதான் உன்னனுமதியின்றி நான் செய்துள்ள காரியங்கள், அக்கா! உன்னிடத்தில் அவர் கொண்டுள்ள காதலின் அளவை கணக்கிட்டுக் கூற முடியாது. சென்ற சில மாதங்களுக்கு முன் அவருடைய தேகமிருந்த இடை தற்போது 10 பவுண்டு குறைந்துவிட்டது. நானே அதைப் பரிசோதித்துப் பார்த்தேன். அக்கா!

அரும் பாடு பட்டு ஒரு குழந்தையைப் பெறுவது போல நூலாசிரியரும் பத்திரிகாசிரியரும் ஒரு நூலைத் திரட்டி எடுப்பதற்குமுன் அதை அடித்துக் கொண்டுபோக வந்துவிடும் பக்ஷிகளுக்கு எண்ணிக்கையே இல்லை; இதற்கோர் சட்டமு மில்லை,

நீ ஏன் இவ்விதம் வருத்தமடையவேண்டும்? நீங்களிருவரும் புனர் விவாகம் செய்துகொண்டாலென்ன? உங்களுடைய அருமையான வாழ்நாள் முற்றும் பாழ்படும்படியாக ஏன் கழிக்கவேண்டும்? நாமென்ன பெற்றோர்கள் இருந்து ஒரு காரியத்தை நடத்தி வைக்கும் பாக்யத்தைப் பெற்றிருக்கிறோமா! அதில்லை. நமக்கு நாமே செய்துகொண்டாலன்றி காரியம் நடக்கும் வழியே கிடையாது. ஒருதினமேனும் புருஷனையறிந்த பெண்களுக்கு வேண்டுமானால் விவாகம் வேண்டாம். கேவலம் உலகமே அறியாதவர்களுக்கு விவாகம் செய்யாமலிருப்பதால் அநேக கெடுதல்கள் சம்பவிக்கின்றன. அவர்களுக்கு விவாகம் செய்யவேண்டியது அவசியமேயாகும். அந்த விவாகத்திற்குச் சம்மதப்பட்டவர்கள் அவர்களிடம் வரட்டும்; சம்மதிக்காதவர்கள் வரவேண்டாம். அவர்களுடைய பெற்றோராயினும் சரி, மற்றோராயினும் சரியே. இஷ்டமிருப்பின் அவர்களிடம் சகஜமாக இருக்கட்டும். இன்றேல் விவாகம் செய்து அவர்களைத் தனிமையில் வைத்துவிடுவது மகா உத்தமமாகும். அநியாயமாக பால்ய விதவைகள் விவாகமின்றிக் கெட்டுப்போய்ப் பாபப் புதையலுக்கு பங்குதாரிகளாவதுடன் அதனால் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் அவமானமும் தீராத வியசனமும் உண்டாக்கிவைப்பதைவிடத் தெரிந்த காரியமாக விவாகத்தைப் பகிரங்கமாகச் செய்துவிட்டால், விதவைகளை ஆதரிப்பதற்கு ஒரு காப்பாளி ஏற்பட்டுவிடுவதோடு மேற்குறித்த பலவித இன்னல்களும் நீங்கி யொழியும். அக்கா! இவ்விதமான ஓர் ஏற்பாடு சட்ட நியாயப் படிக்கிருந்தும் ஏன் நடத்தாமலிருக்கவேண்டும்? உன்னைப்போன்ற ஒரு திக்குமற்ற அனாதைகளுக்கு விவாகம் செய்வதுதான் அத்யாவசியமென்று எனக்குத் தோன்றுகின்றது. அக்கா! நான் யாருக்கும் பயப்படமாட்டேன். என்னை எல்லோரும் தள்ளிவிட்டாலும் விடட்டும். நான் காதலித்த ஆநந்தாவையே நான் மணந்து ஆநந்த

புதிதாக புத்தகம் வெளியிடப்போவதை நாம் விளம்பரம் செய்யா முன்னரே இரவல் விழுங்கிகளுக்கு எப்படியோ தெரிந்துவிடுகின்றது. அவர்கள் முதலிலேயே வந்து, புதிய புத்தகம் வரப்போகிறதாமே, அதில் நம்மை மறக்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்து செல்லும் வேடிக்கையை என்ன சொல்வது?

மாக வாழப்போகிறேன். நீ இதற்கு தடை சொல்லமாட்டாயென்று நம்பியிருக்கிறேன். விதவா விவாகம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு எவ்வாறு சம்பந்தம் செய்வது என்ற கேள்வி உண்டாகலாம். விதவா விவாகம் செய்துகொண்ட ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குக் கொடுத்து சம்பந்தம் செய்துகொள்வது பிறகு வழக்கமாக ஏற்பட்டுவிடும். கடவுள் சிருஷ்டியில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரான நான்கு ஜாதிகளே ஆதியில் உண்டாயிற்றென்று கூறப்படுகிறது. தற்போது பார்; அவை நாலாயிரம் ஜாதிகளாகப் பிரிந்துவிட்டன. அதுபோன்று விதவா விவாகத்தின் மூலம் ஒரு ஜாதி ஏற்படட்டும். அந்தந்த ஜாதியினர் அந்தந்த ஜாதியில் விவாகம் செய்வதோ, இஷ்டமானவர்கள் கலப்புவிவாகம் செய்துகொள்வதோ அது அவரவர்களின் மனத்தை—சம்மதத்தைப்—பொறுத்தவாறு நடக்கட்டும். இதில் கட்டாயம் ஏதுமில்லை யல்லவா? இக்காலமோ கலிகாலம். அக்கிரமத்தின் ஆதிபத்யம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கெடுதலான காரியத்திலும் ஒரு நன்மை இருக்குமல்லவா? வீணாகக் கெட்டழிந்துவிடாமல் விவாகத்தைச் செய்துவிட்டால், ஒரு கட்டுக்குள் அடங்கி ஒருவருக்குக் கீழ்ப்படிந்து குடும்பம் நடத்தும் மார்க்கம் உண்டாகிவிடுகின்றதல்லவா? இவைகளை எல்லாம் முக்கியமாக யோசிக்கவேண்டும். உன்னிடம் இவ்விஷயங்களைக் கூறுவதற்கே பயப்பட்டிருந்தேன்; இன்று துணிந்துரைத்துவிட்டேன். அக்கா! நீ என்ன பதில் சொல்லுகிறாய்?

சுலோ.—என் கண்மணி! கோபிநாதா! நீ உரைத்த யாவும் கிரம்பவும் நன்மை தருவனவே. அவைகளைப்பற்றி நான் உன் மீது

புத்தகம் இரவல் வாங்கும் பொருட்டாக, உறவின் முறையே அறியாது மூலைமுடுக்குகளி லிருந்தவர்களெல்லாம் உறவுமுறை கொண்டாடிக்கொண்டு வெளிக்கிளம்புகின்றார்கள். "நான் பார்த்தபோது குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தையாகிய நீ இயற்றிய புஸ்தகங்களை நான் பார்க்க வேண்டாமா! எங்கே! எல்லாவற்றிலும் ஒவ்வொன்று கொடு." என்று அதிகார தோரணையிலேயே சிலர் கேட்கின்றார்கள். இரவல் பெறுவதில் என்னென்ன வேடிக்கை தந்திரங்களப்பா!

கோபிக்கவில்லை. என்னுடைய தலைவிதி என்னை என்ன கதிக்குள்ளாக்க எண்ணி இருக்கின்றதோ யார் அறிவார்கள். என்மீது உனக்குள்ள கரைகாணாத வாஞ்சையை ஏற்று என்னுள்ளம் பூரிக்கின்றது. தற்போது நீ எடுத்துக் கூறிய ஆழ்ந்த யோசனையுடன் கூடிய மொழிகளைக் கேட்பவர்கள் இக்காலத்தில் பெரும்பாலர் இருப்பினும் சிலர் மறுத்து மார்தட்டிச் சண்டையிடுவதற்கல்லவோ முற்படுகின்றார்கள்! என்னன்பே! கோபி! உனக்கு உன் மனங்கொண்டபடி விவாகத்தை நடத்திவைப்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. நான் முன்னரே சந்தேகித்தேன்; அவ்விதமேதான் உன் வாய்மொழியும் கிடைத்தது. அவ்விதமே நான் விவாகத்தை முடித்தால் பாழும் ஜனங்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா! "முதலில் தம்பிக்கு ஓர் விதவையைப் பிடித்து விவாகம் செய்துவிட்டால் பிறகு தானும் செய்துகொள்ளலாம்" என்கிற கருத்துடன் அவ்வாறு செய்தாள் என்று என்னைத் தூற்றித் திட்டுவார்களப்பா! நான் என்ன செய்வேன். என் விதியை நான் எண்ணி வருந்துவதோடு நில்லாமல் உனக்கும் என்னால் சமூகத்தினர் சாபம் ஏற்படும். என்னை நல்ல விதத்தில் சந்தோஷமாகக் கண்டு களிக்க நமது தாயார் நினைத்திருப்பின் என்னை நான் அறியு முன்னர், தன் பர்த்தாவின் வாக்கையும் தட்டிவிட்டு இத்தகைய காரியத்தைச் செய்து கலங்க வைத்திருப்பாளா! இவைகளை யெல்லாம் சிந்தித்துப் பயனென்ன? என் தலையில் ஈசன் எவ்விதம் எழுதி இருக்கின்றானோ அவ்விதம் தான் நடக்கும். இதற்குக் கவலைப் பட்டுக் காரியமாவதுண்டா!..ஆ! அதோ டெலிபோன் மணி படிக்கின்றது; யார் கூப்பிடுகின்றார்களோ!" என்று கூறிக்கொண்டே எழுந்து டெலிபோனருகிற் சென்று பேசலானான். "ஹலோ........யார் கூப்பிடுகிறது?........என்ன விஷயம்?...... என்ன........அர்ஜண்டு கேஸா!......ஜுரம் எத்தனை டிகிரி இருக்கிறது.......நூற்றைந்து டிகிரியா........சரி........விலாச மென்ன ....அடையாறு?........முத்துபவனமா!.......பேசுவது யார்........

எந்த இடத்தில் நாம் ஆயுள் பரியந்தம் பிரியாமல் சிநேகம் செய்ய நினைக்கின்றோமோ அந்த இடத்தில்தான் முக்கியமாகப் பிரிய நேரும்படியான சந்தர்ப்பங்களும் சம்பவங்களும் நிகழ்ந்துவிடுகின்றன.

21027

முதலியாரின் மகளா!..........இதோ வருகிறேன்....உடனே 'ஐஸ்' வையுங்கள்........சரி வந்தனம்........" என்று பேசிவிட்டு வந்தாள். உடனே தன் பெட்டியை எடுத்துக்கொண்டு தன் மோட்டாரில் புறப்பட்டாள்.

வண்டி நேரே முத்துபவனத்திற்குப் போய் நின்றது. சலோசனு பெட்டியை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். அங்கு முன் கட்டிலிருந்த வேலைக்காரன் "அம்மா! உள்ளே செல்லுங்கள்" என்றான். சலோசனு உள்ளே சென்றதும் அங்கு போடப்பட்டிருந்த ஒரு சோபாவில் அண்ணுசாமி நகைத்துக் கொண்டே உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்; மற்றொரு சோபாவில் உட்கார்ந்திருந்த சாமளா பிலிம் கம்பெனியின் மானேஜரான சாம்சுந்தர் என்பவன் "ஹலோ! ஹலோ! கமான் டியர் லேடி டாக்டர்! குட் நைட்." என்று கூறிக்கொண்டே பல்லைக் காட்டி வாயைப் பிளந்தான். இந்த எதிர்பாராத இரண்டு சத்துருக்களையும் கண்ட சலோசனு திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாமல் "ஆ! இதென்ன நமது சத்துருக்களாகிய இவ்விருவரும் ஏன் இங்கிருக்க வேண்டும்? ஐயோ! ஏதோ மோசம் போலத் தோன்றுகின்றதே!" என்று நினைத்து திகில் பிடித்து ஸ்தம்பித்து கூண்டி லடைபட்ட கிளிபோல் நின்றுவிட்டாள்.

தடபுடலாகக் கோபம் வந்துவிடும் மனிதர்களை ஒரு நிமிடத்தில் சாந்தம் செய்துவிடலாம். ஆழமான அகங்காரத்துடன் பார்ப்பதற்குப் பூனைபோல நடிப்பவர்களின் சீற்றத்தைச் சாந்தி செய்வதுதான் கடினம். அவர்களுக்கு அச்சீற்றம் தானுகவே சாந்தியாவதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

தாயில்லாக் குழந்தையைக் கண்டால் "ஐயோ பாவம்!" என்கிற இரக்கம் எல்லோருக்கும் உண்டாகின்றது. அவ்விரக்கத்துடன் அக்குழந்தைக்கு உண விட்டால் அதன் வயிறு நிரம்பிவிடுகிறது. அக்குழந்தையையுடைய வீட்டினர்க்கும் தாயில்லாக் குழந்தையை வளர்க்கும் சிரமம் குறைந்துவிடுகின்றது.

10—வது அதிகாரம்

ஆபத்பாந்தவன்—தூபம் போடும் தூமகேது.

தனிமையில் வீற்றிருந்த கோபிநாதன், தன் தமக்கையின் துயரத்தை எண்ணியே மிக்க விசனமுற்றுச் சாய்ந்துகொண்டிருந்தான்; அந்த சமயத்தில் மீண்டும் டெலிபோன் மணி அடித்தது. கோபி அதனருகிற்சென்று "ஹலோ....ஹலோ........யார்........ஆநந்தவா!........நான் சும்மாதானிருக்கிறேன். என் கண்மணி! இதற்குக் கேட்கவேண்டுமா! கட்டாயம் வருகிறேன்...என் அக்காவா!...வீட்டிலில்லை....இருப்பினும் பாதகமில்லை....நமது விஷயத்தை நான் அவளிடம் கூறிவிட்டேன்....ஓ! தடையின்றி நீ இங்கு வரலாம்....சரி....நிரம்பவும் சந்தோஷம் உடனே வா!..." என்றான். தன் காதலி வரப்போகும் சந்தோஷப் பெருக்கினால் ஆநந்தத்தின் வரவை எதிர்பார்த்தவண்ணமிருந்தான்.

"பூங்கொடியோ! பொன்னம்பாவையோ! சந்திர பிம்பமோ! சுந்தர ரம்பையோ!" என்று ஐயுறும்படி அதியத்புதமான வனப்பும் தேஜசும் ஒருங்கே பொருந்திய மின்னிடை மாதரசியாகிய ஆநந்தா அவ்விடத்திற்கு வந்தாள். ஆகாய நிறத்தையொத்த பட்டுச் சேலையும் அதே நிறமுள்ள அங்கியும் அணிந்திருந்தாள். அவளுடைய சிகையின் ஜடையானது கருமேகமானது கொடிபோன்று படர்ந்து ஆகாயத்தில் தவழ்ந்து விளையாடுவதுபோன்று அவள் முதுகின்

மகனுக்கு விவாகம் செய்துவிட்டால் தான் மாமியார் பட்டம் பெற்றுவிடுவதோடு, வரதக்ஷிணை, சீர்வகைகள் முதலியன பெற்றுவிடலாம்" என்கிற ஆசையைக்கொண்டு விவாகத்தைச் செய்துவிடுகிறார்கள், மருகி வீடுவந்த பிறகோ, சீர்வரிசைகள் பெற்றதெல்லாம் சீற்றவரிசைகளாக மாறிச் சண்டையும் பூசலும், கிணறுவெட்ட அதனின்றும் பூதம் புறப்பட்டதுபோல் அங்கு ரார்ப்பணமாகிவிடுகின்றன.

மீது வெகு அழகாகப் பாய்ந்து முழங்கால் வரையில் ஓடியாடிக் கொண்டிருந்தது. அந்தப் பின்னலின் நுனியில் நக்ஷத்திரங்கள் ஜொலிப்பதுபோன்று வெண்பட்டில் 'ரிப்பன்' பறந்துகொண்டிருந்தது. முழங்கைக்குமேல் அரைப் பாகம் வரையில் அங்கிகள் இங்கிதமாய் அலங்கரித்துக்கொண்டிருந்தன. அதற்குக் கீழ்ப் பாகத்தில் நன்றாக உரித்தெடுக்கப்பட்ட இளம் வாழைத் தண்டுகள் போன்ற கரங்களானவை ஆகாய நிறச் சேலையின் பக்கமாக இருப்பதை நோக்கினால் பளீரென்று மின்னல் கொடி ஓடுவதுபோன்ற தோற்றத்தை யளித்தன. அத்தகைய அற்புதமான கரங்களில் அமரும் பாக்கியம் செய்தவை இரண்டு மெல்லிய தங்க வளையல்களேயாகும். சிறிய வைரத் தோடு ஒன்றுமட்டும் அவளுடைய செவிகளில் அமர்ந்து அவளுடைய இயற்கை யலங்காரத்திற்குச் சிகரம் வைத்தாற்போல பிரகாசித்தது. அவளுடைய சண்பக மொட்டுப் போன்ற நாசியின் இயற்கை அழகைக் கண்டு திகைப்படைந்த மூக்குத்திகள் அதில் பொருந்த பயந்து, வியந்து விலகியதுபோன்று ஒன்றுமே இல்லாதிருந்தன. அதிகமான உயரமும் பருமனும் இல்லாமல் திட்டமான உருவினளான அவள் நகைத்துக்கொண்டே கோபிநாதனின் எதிரிற் சென்று அவனது கைகுலுக்கிப் பதுமைபோன்று நின்றாள். அவளைக் கண்ட கோபிநாதன் அளவற்ற ஆநந்தத்தை யடைந்து "கண்மணி! உட்காரு" என்று கூறி ஓராசனத்தில் அமரச்செய்தான்.

ஆநந்தா.—நான் வந்தது தங்களுக்கு இடையூறாக இருக்குமோ! அக்கா எங்கே சென்றார்கள்?

சில கபட குள்ளநரிகள் ஒருவருக்கு வந்திருக்கும் கடிதத்தைத் திருட்டுத்தனமாக எடுத்துப் படித்து விஷயத்தை அறிந்துகொண்டு, அக் கடிதத்தைப் பெற்றவர்கள் அதைக் காணமல் தேடி யலையும்போது மேற் குறித்தவர்களும் ஒன்று மறியாதவர்கள் போல் நடித்து, கூடத் தேடி ஒத்து பாடுகின்றார்கள். இவ்வித கபட புத்தி யுடையவர்கள் நல்ல பாம்பினும் கொடிய விஷத்தை யுடையவரே யாவர். கூட விருந்து கொள்ளி வைக்கும் பேய்கள் இவர்கள் தாம்.

கோபி.—இடையூறு! ஆமாம், ஒருவிதத்தில் இடையூறுகத்தா னிருக்கிறது.

ஆனந்தா.—என்ன அங்ஙனம் கூறுகின்றீர்கள்? ஒருவிதமென்றால், அர்த்தமென்ன?

கோபி.—என்னுடைய மனத்தை சில காரணங்களினால் விசனமே முற்றும் வந்து சூழ்ந்துகொண்டு என்னை வதைத்துக் கொண்டிருந்தது. அவ்விசனத்திற்கு இடையூறான ஆநந்தம் வந்துவிட்டதால் அவ்வாறு கூறினேன். சரியில்லையா!

ஆநந்தா.—பேஷ்! அது மிகவும் சரியேதான். தங்களை விசனம் கப்பிக்கொண்டதாகச் சொன்னீர்களே! அதென்ன விசனம்? என்னிடம் கூறலாகாதா!

கோபி.—கண்மணீ! உன்னிடம் கூறாத செய்தியும் வேறுளதா! அதொன்றுமில்லை, என்னுடைய தமக்கையின் முகம் வாடினால் எனது அகமே வாடி வருந்திவிடுகிறது. என்னுடைய உயிரே என் அக்காவின் உயிராகும். இன்று எக்காரணம் பற்றியோ என் தமக்கை அழுதுகொண்டிருந்தாள். என்னைக் கண்டு முகத்தை மாற்றி நகைப்பை வருவித்துக்கொண்டாள். நான் காரணத்தை மன்றாடிக் கேட்டும் யாதும் பயன்படவில்லை. என் மனமும் அதனாலேயே விசனத்திலாழ்ந்தது. அதுபற்றிய சம்பாஷணையிலேயே உன்னைப்பற்றிய விஷயத்தையும் தெரிவித்துவிட்டேன்.

ஆநந்தா.—ஆகா! தெரிவித்தீர்களா! அதற்கத்தம்மாள் என்ன சொன்னார்கள்? சம்மதித்தார்களா!

கோபி.—என்ன, ஆநந்தா! இவ்வளவு விரைவாகக் கேட்கிறாய்! என் தமக்கையின் உயிரே என்னுயிர் என்றுதான் முன்னரே தெரிவித்திருக்கிறேனே! அதற்கு என்னுருயிர் அக்கா மறுத்துக் கூறுவளா? உடனே சம்மதித்துவிட்டாள்.

"பிறர் கடிதத்தைக் கவர்ந்து படிப்பதும், பிறர் விஷயத்தைக் கபடமாக அறிவதும், பிறர் மனைவியைக் கெடுப்பதுமான செய்கைகள் மூன்றும் ஒரேவித பாவச் செய்கைகள்" என்று ஒரு அநுபவ ஞானி கூறுகிறார்.

ஆநந்தா.—அப்படியா! மிக்க சந்தோஷம். அந்தம்மாளைக் காண எனக்கும் மிக்க வருத்தமாக இருக்கிறது. ஐயோ பாவம்! அவர்கள் ஏன் மறு மணம் செய்துகொள்ளலாகாது. இதுபரியந்தம் விசனக் கடலிலேயே மூழ்கிவிட்டார்களே! இனியாவது விமோசனம் உண்டா, இல்லையா!

கோபி.—உம். அவளுடைய கதையைக் கேட்கவும்வேண்டுமா! அது மிகவும் விசனகரமானது. கூறுவதற்கே என் மனம் கூசுகிறது. அதையேன் கிளப்பவேண்டும். அது கிடக்கட்டும். ஆநந்தா! என்னிடம் ஒரு விஷயத்தைத் தெரிவிக்காமலேயே மறைத்துவிட்டாய்! ஆனல் அது தெரியாமல் மறைவதுமட்டும் துர்லபம்தான். ஏனெனில் இன்று வந்த நியூஸ் பேபர் அதை உடைத்துவிட்டதுடன் இதோ உனது சங்கிலியிலுள்ள மெடலும் காட்டுகின்றது. கண்மணி! ஆநந்தா! நீ சங்கீதப்போட்டியில் முதல் பரிசு, தங்கப் பதக்கம் பெற்றது எனக்குப் பெருமையல்லவா! அதை என்னிடம் நீ ஒளிக்கலாகுமா! நான் என்ன உன்னை வேண்டாமென்று தடுப்பேனு! அன்றி வேறு என்னதான் செய்வேன். சரி! நீ சொல்லாவிடினும் தானுக எனக்குத் தெரிந்துவிட்டது. அங்கு நீ எந்த பாடலைப் பாடினுயோ, அதைப் பாடு.

ஆநந்தா.—மை டியர்! இதோ பாடுகிறேன். (பாடுகிறுள்)

முகாரி—ரூபகம்.

பல்லவி

நகுமோமு ஜூபவேமிரா ராமா!—நனுப்ரோவநேரமேமிரா ந

அநுபல்லவி.

சுகுமாரா! சுந்தராகாரா! விகசிதமுகலோல ராரா ந

பிறர் பாடும் அழகான பாடல்களைத் தாம் கற்றுக்கொள்ளவேண்டுமென்று சிலர்ஆசைப்பட்டு அவ்வாறே கற்றுக்கொள்கின்றுர்கள். ஆனல் அவர்களிடத்தில் மற்றவர்கள் ஒரு பாடல் கற்றுக்கொள்ளவேண்டுமென்றால் பாடிக்கொண்டிருக்கும்போதே மறந்துவிட்டதென்று ஒரு புளுகு போட்டுவிடுகின்றுர்கள். அத்தகையோருக்குக் கற்றுக் கொடுக்க மனம் எவ்விதம் தான் இசையும்?

சரணம்.

பிருதுலேக போஷிஞ்சே பரமதயா நிதி நீவே
ஸரஸிஜாக்ஷ சலமேலரா வரமோஸங்கி ப்ரோவராரா ந

ஆபோகி—ஆதி

பல்லவி.

இனகுல ராமா! இதி சமயமு கனுலாரஜூசி காவவையராமா இ

அனுபல்லவி.

தனவாரனீ தலசகனுண்டே நனுப்ரோதுவாரு. நினுவிடசிலேரு இ

சரணம்

முனுநின்னு வேடிமோரபேட்டின
வனிதப்ரக்லாத கோனியாடே த்ருவ
கனுடைன விபீஷணுனி ப்ரோசின
கனரகஸ்யமுனு கனுகோண்டினையா இ

ப்யாகடா—சாபு.

பல்லவி.

காவுமனி எந்தோ வேடிதினையா—கருடவாகன நினு
வேடிதினையா கா

அனுபல்லவி

ஸ்ரீவேணுகோபாலா! ச்ருதஜனபரிபாலா
தேவகிப்ரியபாலா! ஸ்ரீ ருக்மிணி லோலா கா

ஒருவர் மீதொருவர் கொண்டுள்ள தவேஷத்தினுல், கண்டபடி பேசி விடுவதும் "பிள்ளை குட்டியை விழுங்கி விடுவீர்கள்" என்ற அநியாய வார்த்தையைக் கூறுவதும்," கோயிலில் சத்யம் செய்ய வருகிருயா?" என்று கேட்பதும், பெருத்த கோர சம்பவங்களாகவும் வெறுப்பை யுண்டாக்கும் செய்கைகளாகவும் பிறர்க்கு மூடிகின்றன. பேசுகிற மூடர்களோ வெகு எளிதில் கூறிவிடுகிருர்கள்.

சரணம்.

அசுருனி சம்பின ஆயாஸமோ! லேக
சசிமுக தேவினி சூசேஸந்தோஷமோ
வசதபாலனஜேயு வாரிஜாக்ஷா நீவு
பசிவாடனி எஞ்சி பரா முகமோதண்றீ கா

இந்த மூன்று கீர்த்தனைகளும் பாடி, பிறகு தோடி, சங்கராபரணம் கானடா, வஸந்தா நான்கு ராகங்களில்,

ஆயர்தம் குலத்துதித்த அன்பே! என்னாராவமுதே!
தூயநற்சுடரே! எந்தன் துகளறச் செய்வாய் ஐவர்
நேயனே! அருந்தவத் தோர்க்க பயமளிக்கும் நிமலா!
சேயேனை யாதரித்துச் சிறப்புறச் செய்வாய் கண்ணா!

இந்தப் பாடலைப் பாடினேன். இவ்வளவு தான். மை டியர்! என்னுடைய இந்த அல்பமான சங்கீதத்தைப் பற்றிப் பறை சாற்ற வெட்கியே தம்மிடம் கூறவில்லை. என்னுடைய சினேகிதை என்னை வற்புறுத்தியதால் நான் ஏதோ தமாஷாகச் சென்றேன். எனக்கு முதல் பரிசு கிடைத்தது. இதை நான் சொல்லாத குற்றத்திற்கு மன்னிக்கவேண்டும். சிலர் சாதாரணமான சங்கீதத்தைப் பற்றியே தடபுடலாகப் பெருமை படித்துக் கொண்டு விளம்பரம் செய்கிறார்கள். சங்கீதம் என்பது சாமான்யமானதா! எப்பேர்ப்பட்ட வித்வான்களுக்கும் ஒரு சமயம் வருவது போல மறு சமயம் வருவதில்லை. பாட உட்காரும் நேரம் நன்றாக அமைந்த காலத்திலேயே சங்கீதத்திற்கு மதிப்பும் ஆகர்ஷமும் உண்டாகின்றது. வேளை கெட்டதாயின் வெகு நன்றாகப் பாடுவோருக்கே கேவலம் மோசமாகிவிடுகிறது. இதை நான் எத்தனையோ இடத்தில் பிரத்யக்ஷமாகப் பார்திருக்கிறேன். அதோடு எனது அனுபவத்தில் பல தரத்தில் கண்டிருக்கிறேன். நன்றாகப் பாடுகிறார்கள் என்ற

"தன் காசு செல்லாவிட்டால் தட்டானைக் கட்டி புதைப்பதா" என்பது போலத் தன் மனிதரின் குணம் சரியா யில்லா விடில், பிறர் கலகம் செய்து விட்டதாகக் கூறிச் சண்டை யிடுவதே சிலர் வழக்கம்,

பெயர் பத்து பேர் சேர்ந்து சொல்லிவிட்டால் அது நிலைத்துவிடு கிறது; அப்பாடல் ஒன்றுமே ஒருவிதமான குறையு மின்றி சுத்த மாக இருக்கும் என்பது ஒருபோதும் நிச்சயமே இல்லை. பாடுகிறவர்கள் சிறியோராயினும், பெரியோராயினும் அவரவர் களின் மனிதர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அவை கர்ணும் ருதமாக இருக்கலாம். பொது ஜனங்களுடைய அபிப்ரா யத்தை யல்லவா முதலில் கவனிக்கவேண்டும், அவர்களின் செவிக்குப் பிடித்த நாளும் இருக்கலாம்; பிடித்தமில்லாத நாளும் இருக்கலாம். ஒருவருடைய பெற்றோர்கள் "என் பெண்ணுடைய சங்கீதத்திற்கு நிகர் உலகத்திலேயே இல்லை" என்று பெற்ற வாஞ்சையினல் பறை சாற்றலாம். ஆனல் பொது ஜனங்களின் அபிப்பிராயமும் அவ்வாறில்லை என்று அவர்கள் பொது ஜனங்களைப் பழிப்பதும், துவேஷித்துக்கொள்வதும், குற்றலாகச் சாக்கிட்டு வசை கூறுவதுமாகவிருந்தால் அதனல் அந்த சங்கீதத் திற்குள்ள மதிப்பு இன்னும் கெட்டுப்போய்க் குறைந்துவிடுமே யன்றி விருத்தியாகுமா! தமது மக்களின் சங்கீதத்தை விருத்தி செய்வதற்கு முதல் அஸ்திவாரமானது யாதெனில்—பொறுமையும், கர்வமின்மையுமே யாகும். சங்கீதத்தைக் கரைகண்டவர்கள் யாரே னும் உண்டா! சாக்ஷாத் வாணியே இன்னும் சங்கீதத்தின் எல்லை யைக் காணவில்லை என்ற தாத்பர்யத்துடன் ஒரு கரத்தில் யாழும் மற்றொரு கரத்தில் நூலும் தரித்தவாறு காட்சி கொடுக்கிறாள். கல்விக்கும் சங்கீதத்திற்கும் ஆதி வித்தாகிய சாக்ஷாத் வாணியே அவ்விதமிருக்கையில் கேவலமான நரஜனங்களுக்கு என்ன சொல் வது. அரைகுறையான வித்தைக்கு அதிக கர்வம் எப்போதும் சக ஜமானது. சங்கீதத்திலாகட்டும் மற்ற எந்த வித்தையிலாகட்டும் பொறுமையும் பணிவும் இருந்தாலொழிய அந்த வித்தைக்கு விருத்தி

தமது விரோதிகளிடத்தில் வேறு யாரேனும் பேசினல் கூட அங்கு மறைந்தேனும் ஒட்டு கேட்பதும், அன்றி அனுவசியமாக ஒரு காரி யத்தை முன்னிட்டு அங்கு பன்முறை வந்து நின்று கேட்பதுமான அற்ப புத் தியே சிலருக்கு அகலாது நிலைத்துவிடுகின்றது. அவர்களோ "நான் ஒரு விஷ யத்திற்கு வருகிறேன, போகிறேன!" என்று தன்னைத்தானே ஸ்தோத்திர மும் செய்துகொள்ளத் தொடங்கிவிடுகிறார்கள். இதுவென்ன வேடிக்கையோ!

ஏற்படவேதே இல்லை. இதை யறிந்தோ அறியாமலோ சிலர் தலை கீழாகக் கவிழ்ந்துவிடுகிறார்கள். இப்பொழுது நான்தான் பாடுகி றேன். இதைக் கேட்பவர்களில் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். பிடித்தமில்லை என்று கூறியவர்களைத் திட்டுவதா? வேண்டுமென்றே அவர்கள் சொல்லியதாகக் கூறிவிடலாமா! இதுவெல்லாம் ப்ரபஞ்சத் தில் ஒரு வேடிக்கையாகவே எனக்குத் தோன்றுகின்றது. என் னுடைய பாடலைப்பற்றி நானே பெருமை சொல்லிவிட்டால் அதில் என்ன உபயோகம். அவ்வாறு சொல்வது எனக்கு வெட்கமாக இருந்ததனாலேயே நான் சொல்லவில்லை.

கோபி.—ஆகந்தா! பேஷ்! நீ சொல்லிய யாவும் வெகு சரியே! உலகத்தில் இவ்விதந்தான் நடக்கின்றது. இந்த வித்யாஸ புத்தி பெண்பிள்ளைகளில் மட்டுமில்லை. ஆண் பிள்ளைகளிடத்திலும் அழுந் திக்கிடக்கின்றது. எத்தனை படித்தவர்களாயும் எல்லாந் தெரிந்தவர்க ளாயுமிருப்பினும் அவர்களிடத்தில் இந்த அற்பகுணமில்லாதிருப்ப தில்லை. எந்த விஷயத்திலும் கர்வம் உண்டாகிவிடுமாயின் உடனே கவிழ்ந்துவிடவேண்டியதுதான். கர்வம் என்பதன் முதல் எழுத்தா கிய க. என்ற எழுத்தினால் கரைத்தல், கவிழ்தல், கண்ணியம் குறை தல் முதலிய உடனே ஏற்பட்டுவிடுமென்பதை நன்கறியலாம். வணக்கம், பணிவு உண்டானால் வளர்பிறை மதியம்போன்று வளர் தல், பரிமளித்தல், பலரும் கொண்டாடி வாழ்த்துதல் முதலியன உண்டாகும். "நமக்கு மிஞ்சியவர்களில்லை" என்கிற அகம்பாவம் வந்துவிட்டால் அழியவேண்டியதுதான். ஆகந்தா! நீ பொற்பதகம் பெற்றுவிட்டதற்கு சிலர் வயிறெரிந்ததும் என் காதில் பட்டது. வாய்வீணர்களுடைய பேச்சுக்கு வரம்பும் உண்டா! அதை பார் கவ னிப்பார்கள். அவர்களைப்போன்ற வம்பர்கள்தான் அதைப் பொருட் செய்யவேண்டும். ஆகையினால் அதை நான் லக்ஷ்யம் செய்யவில்லை.

சிலரிடத்தில் அந்யோன்யமாகப் பழகுவதைக் கண்ட வேறு சிலர், "உனக்கென்ன அவர்களிருந்தால் போதும், எங்களைக் கவனிக்கிறாயா! நாங்கள் உனக்கு லக்ஷ்யமா!" என்று வீணான பொறாமை வார்த்தைகளைக் கொட்டி யளந்துவிடுகிறார்கள். இவை அறிவின்மையினால் பிதற்றும் மொழி களோ, அன்றி அகம்பாவத்தினால் கூறும் வார்த்தைகளோ தெரியவில்லை.

ஆநந்தா:—நான் இங்கு ஒரு காரியமாக வந்தேன். அதை மறந்து ஏதேதோ பேச்சுக்களில் நேரம் சென்றுகொண்டிருக்கிறது. இன்று சினிமாவுக்குச் செல்லலாம் என்று என் சிநேகிதைகள் தெரிவித்தார்கள். என் பிதாவும் அதற்குச் சம்மதப் பட்டார்கள். உங்களையும் அழைத்துச் செல்லலாம் என்று வந்தேன். உங்கள் தமக்கையைக் காணவில்லையே! அவர்கள் வந்துவிட்டால் யாவரும் ஒன்று சேர்ந்துபோகலாம். என்ன யோசிக்கின்றீர்கள்?

கோபி.—ஒன்றுமில்லை. என் தமக்கை சென்று வெகுநேரமாய்விட்டதே! இன்னும் வரவில்லையே! ஒரு இடத்திலும் அவ்வாறு அவள் தங்கமாட்டாளே—என்று தான் யோசிக்கிறேன். இத்தனை நேரம் என்ன செய்வாள். அவள் வந்தபிறகு யாவரும் செல்லலாம்—என்று வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். மணி ஏறிக்கொண்டே இருந்தது. நமது சுலோசனை வாராமையினால் கோபிக்கு மனக் கலக்க முண்டாயிற்று, உடனே முன்னர் டெலிபோன் செய்த நம்பரைத் திருப்பி "டாக்டர் சுலோசனை அங்கு வந்தார்களே! இருக்கிறார்களா, போய்விட்டார்களா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "இங்கு பார்த்து விட்டு வேறு ஒரு கேஸுக்கு அர்ஜண்டாகப் போயிருக்கிறார்கள். வருவதற்குச் சற்று நேரமாகு மென்று தோன்றுகின்றது." என்றார்கள். அந்தபதிலைக் கேட்டதும் கோபி "சரி இன்னும் எங்கு சென்றிருக்கிறாளோ!" என்று எண்ணி ஆநந்தாவுடன் சினிமாவுக்குப் போய்விட்டான்.

* * * * *

நமது நங்கை நல்லாளாகிய சுலோசனையை இனித் தொடருவோம். சுலோசனையின் சொத்துக்களை விழுங்கி ஏப்பம் விட்டு உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த பரம சண்டாளனாகிய அண்ணாசாமியின் உருவமும், முன்பொரு காலத்தில் தன்னை

பொறுமைக் குணமே பிரதானமாயுள்ள மனிதர்களுக்கு எந்த விஷயத்திலும் பொறுமையே தலை தூக்கி நிற்கின்றது; சமயம், இடம், காலம் ஒன்றையும் அறியாது அச்சமாகப் பேசி விடவும் செய்கிறது.

சினிமாவில் சேரும்படியாகக் கேட்ட மனிதனும் அங்கு கல்லுப் போல உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் சுலோசனு அப்படியே ஸ்தம்பித்து குடல் நடுங்க நின்றுவிட்டாள். அவனைக் கண்ட அவ் விரு பாவிகளும் மிக்க சந்தோஷத்தை யடைந்து பல்லைப் பிளந்து கொண்டே முன்னர் அழைத்ததுபோல மீண்டும் அழைத்தார்கள். நமது சுலோசனு எவ்வளவு படித்திருந்தபோதிலும் தனது சத்ருக் களைக் கண்டதும் மனம் கலங்கிவிட்டது. "ஐயோ! நாம் இந்தப் பாவிகளிடம் வந்து அகப்பட்டுக்கொண்டோமே! இதென்ன கஷ்ட காலம்!" என்று தனக்குள் எண்ணித் தபிக்கின்றுள். அந்தப் பாவி களின் முகத்தை நோக்குந்தோறும் வயிற்றில் கபீரென்று ஏதோ சங்கடம் செய்கின்றது. அந்த நிலைமையுடன் அவள் மிரள, மிரள நாற்புறமும் சுற்றிப் பார்த்த வண்ணம் நின்றுள். அப்போது அண்ணுசாமி அவளை நோக்கி "சுலோசனு! உன் வீட்டில் ஒரு சம யத்தில் என்னை உன் மனம் போனவாறு பேசியது நினைவில் இருக்க லாம். அப்போது உனது காதலனும்—மூக்கலனும்—பக்கத்தி லிருந்த மமதையினுல் நீ உன் மனம் சென்றவாறு உளறினுய். தற் போது இங்கு நீ எந்த நிலைமையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறுய் என்பதை நன்ருக கவனித்துப்பார். இந்தப் பெரியாரை யார் என்று உனக்குத் தெரிந்திருக்கலாம். இவர் உன்னிடம் முன்பு பேசிய போது தாறுமாருக உளறினுயாம். இத்தருணமும் நீ அவ்வாறு உளறுவதற்கு சக்தியுடன் இல்லை; மிகவும் பலஹீனமான, ஆபத் தான நிலைமையில் இருப்பதை நன்குணர்ந்துகொள். ஏன் உன் பொன்னடி நோக நிற்கின்றுய்! இதோ இப்படி உட்காரு" என்று வஞ் சனைபான பார்வையுடனேயே கூறினுன்.

இதைக் கேட்ட சுலோசனுவின் ஆத்திரம் பொங்கி எழுகின் றது. அந்தப் பாவி சொல்லியதுபோலத் தான் மிகவும் ஆபத்தான நிலைமையில் இங்கு அகப்பட்டுக்கொண்டிருப்பதை நினைக்க பகி

தானுக எழுத வரும் நேரத்தில் மட்டும் அதன் அழகும், அமைப்பும், கற் பனையும் ஒழுங்காக அமைகின்றனவேயன்றி வலிந்து "நாம் இதை எழுத வேண்டும்' என்ற ஓர் நோக்கத்துடன் உட்கார்ந்தால் வேலையும் முடிவதில்லை; அப்படிச் செய்யும் வேலையும் ஒழுங்காக இருப்பதில்லை.

றென்கிறது. என்ன செய்வதென்று தோன்றாமல் சற்று திகைத்தாள்; எனினும் தைரியத்தைக் கைவிடாமல் அங்கு போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் தன் பெட்டியுடன் உட்கார்ந்தாள். சுற்று முற்றும் பலமாகப் பார்த்தாள். பிறகு "ஐயா! இந்த விடத்தில் யாருக்கோ ஜுரம் என்று கூறி என்னை யழைத்தீர்கள். இப்போது உங்கள் பேச்சிலிருந்து நீங்கள் மோசக் கருத்துடனேயே என்னை அழைத்ததாக நான் தெரிந்துகொண்டேன். பெரிய மனிதர்களின் யோக்பதை இவ்வளவுதான் என்பதைக் காட்டிவிட்டீர்கள். கேவலம் ஒரு பெண் பேதையை நீங்கள் இவ்வாறு செய்வது கொஞ்சமும் நன்றாக இல்லை. பேண் என்றால் பேயு மிரங்கும் என்பார்கள். அந்தப் பழமொழியை நீங்கள் அடியோடு மறந்துவிட்டு பேயினும் கொடிய குணத்தை யுடையவர்களாக இருக்கின்றீர்கள். ஓய் அண்ணாசாமி! உம்முடைய செய்கைக்கு உம்மை நான் இதுவரையில் விட்டதே என்னுடைய குணத்தை நன்றாகக் காட்டும். என் தந்தையின் ஜீவியகாலத்திலும் அதற்குப் பின்னும் எங்கள் வீட்டுச் சோற்றையே உண்டு எங்களுக்கே துரோகம் நினைத்த உத்தம சிகாமணியல்லவா நீர்! உம்மைக் கடவுள் பார்த்துக்கொள்வார். நீங்கள் இருவரும் என்னை இவ்விதம் வஞ்சனையாகக் கொண்டுவந்து விட்டதனாலேயே என்னால் நீங்கள் எதிர் பார்க்கும் பலன் கிடைத்துவிடுமென்று சிறிதும் நம்பவே வேண்டாம். உங்களாலானவரையில் நீங்கள் முயற்சித்துப் பார்க்கலாம். அந்த முயற்சியினால் என்னுடைய கஷ்டம் நிவர்த்தியாகி என் பிறவியும் நீங்கி என் ஆத்மா சாந்தியடைந்துவிடும். உங்களால் எனக்கு அவ்வுபகாரம் கிடைக்குமேயன்றி என்னால் ஒரு துரும்பத்தனை லாபமும் நீங்கள் அடையமாட்டீர்கள். உங்களுடைய காரியத்தை நீங்கள் தாராளமாகச் செய்யுங்கள். நான் தற்போது ஒருவிதமான துணையுமின்றி தனிமையில் உங்களிடம் அகப்பட்டுக்கொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் அவ்வாறு தனிமையில் அகப்படவில்லை. அங்

கதை ஒருதரம் படித்தாலும் நினைவில் இருக்கிறது. பாடலை ஒருதரம் படித்தால் நினைவில் இருப்பதில்லை. கதையை எத்தனைமுறை படித்தாலும் வரிவரியாகப் பாராமல் உள்ளபடி உரைக்க முடியாது. பாடல்களைச் சிலதரம் படித்தால் அப்படியே எக்காலத்திலும் குருட்டுப்பாடமாக ஒப்பிக்கலாம்.

இங்கெனுதபடி எங்கும் ப்ரகாசமான ஆநந்தமூர்த்தியின் அருள் ஜோதி என்னைச் சூழ்ந்திருப்பது உங்களைப்போன்ற அக்ரமக்காரர்களுக்கு விளங்காது. அவர்கள்பால் அக்கருணை வள்ளல் திருநோக்கமும் செய்யமாட்டார். சினிமாவில் நடிப்பதைப்பற்றி நான் குற்றமாகச் சொல்லவில்லை. எந்த காரியத்திற்கும் அவரவர்களின் இஷ்டம் ஒன்றில்லையா! இஷ்டப்பட்டவர்கள் நடிக்கலாம். இஷ்டப்படாதவர்களைக் கட்டாயம் செய்வதென்பது எந்த சட்டத்திலும் கூறவில்லை. உங்கள் சினிமாவின் அபிவிருத்திக்காக என் மன இஷ்ட விரோதமான காரியத்தை நான் ஒரு போதும் செய்யமாட்டேன். அதற்காக நீங்கள் கேட்ட பிறகு நான் பதில் கூறுவதைவிட இங்கு நடக்கப்போகும் சம்பாஷணை இன்னதென்பதை நான் தெரிந்துகொண்டேன் ஆதலால் இப்போது நீங்கள் கேட்கப்போகும் கேள்விகளுக்கு நானே பதில் கூறிவிட்டேன். நான் சினிமாவில் சேர்ந்து நடிப்பதாக வீண் வார்த்தைகளைக் கூறி என்னை மிரட்டிய மகா யோக்யான அண்ணுசாமி குடும்பத்துடன்—ஆசை நாயகியுடன்—உங்களுடைய கம்பெனியில் உபகாரம் செய்ய வந்திருக்கையில் உமக்கென்ன குறைவு? ஒருவரைக் கண்டித்துப் பழித்தவர்களே அக்காரியத்தைச் செய்வதுதான் இக்கலியின் தர்மம்போலிருக்கிறது. நீங்கள் உங்களாலானவரையில் என்னவேண்டுமானுலும் செய்யலாம். நான் யாவையும் வெறுத்துத் துறந்தவள். சாவுக்கு அஞ்சியவளல்ல". என்று மிகுந்த ஆத்திரத்துடனும் முடுக்காயும் கூறினுள்.

அவள் பேசுவதை எல்லாம் வெகு நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த அவ்விரு பாதகர்களும் "பேஷ்; சுலோசனு! ஒரு பெருத்த கூட்டத்து மத்தியில் நீ நின்று பேசுவதுபோன்று படம் பிடித்தால் வெகு நன்றாக இருக்கும். அதைக் காணும் ஜனங்களின் உற்சாகமும் சொல்லி முடியாது. நீ உயிருக்குத் துணிந்தவளென்

மங்களகரமாகச் செய்யும் எந்த காரியமும் ஒரு தனித்த அழகைத் தருகின்றது. பொம்மைகளை உட்காரவைத்து வேடிக்கையார்த்தமாகக் கல்யாணமென்று செய்தாலும் அதுவும் ஓர் வைபவமாகவே இருக்கிறது. மேள வாத்தியங்களும், நிறைந்த கூட்டமும், தடபுடலான சாப்பாடும் ஒன்றி கூடிவிட்டால் அது ஓர் தனித்த அழகுடன் விளங்குகிறது.

பது எங்களுக்குத் தெரியும். நீ என்னதான் டாக்டராகவிருப்பினும் உனக்கு நேரக்கூடிய ஓர் பெருத்த ஆபத்திருக்கின்றதே அதை எத்தனை தரந்தான் தடுக்கவியலும்? உன்னாலும் தீர்க்கக்கூடாதபடி பிள்ளையார் வேஷம் உனக்கு வந்துவிட்டால் உடனே நீயே தற்கொலை செய்துகொள்வாய். அந்த தீர்மானத்தை மனத்தில் எண்ணியே நீ எதற்கும் துணிந்திருக்கவேண்டுவது அத்யாவசியமல்லவா! அதை நான் அறிவேன். உனக்குள் நீ மகா உத்தமி என்றும், உன்னுடைய செய்கை;யாருக்கும் தெரியாதென்றும் நினைத்திருக்கிறாய். அவ்வாறான மூட எண்ணங் கொள்ளாதே. சென்ற மாதத்தில் நீ இருக்கும் தெருவிலுள்ள ஒரு குப்பைத் தொட்டியில் அரை வளர்ப்பு வளர்ந்துள்ள 5 மாதத்துப் பிண்டத்தைக் குப்பை எடுப்போன் கண்டு எடுத்த ரகஸியத்தை யாருமறியமாட்டார்கள் என்று நினைக்கிறாயா! அந்தப் பிண்டத்தைப் பார்த்த உடனே அது உன்னால் எறியப்பட்டதுதான் என்று பல ஜனங்களும் கூறினார்கள். அதை நாங்களே வெளியிட்டுப் போலீஸாரிடம் கூறிவிடலாமா என்று நினைத்தோம். பிறகு யோசித்ததில் அம்முறை வேண்டாம் என்று வாளாவிருந்தோம். நீ கெட்டது கெட்டாய். அந்த கெட்ட தன்மையை கடித்துத்தான் எங்களுக்கு உதவி செய்வதற்கு உனக்கென்ன தடை. ஆகையினால்தான் நாங்கள் கேட்கிறோம்" என்று தாறுமாறாக உளறினார்கள்.

இந்த அக்கிரமமான மொழிகளினால் மனம் வெதும்பிப் போய் "ஹா! இதென்ன அபாண்டம்! ஐயோ! கடவுளே! உன்னையே நம்பி சரணம் புகும் பேதை என்னை நீ இவ்விதமா பரிசோதிக்க வேண்டும்? என்னால் இத் துன்பத்தை—இவ் வசைச் சொல்லைத் தாங்கக் கூடவில்லை. நான் என்ன செய்வேன்? என்னுயிரை அபகரிக்காது என் மானத்தை மட்டும் போகும்படியாகச் செய்வது உனக்

சிலர் நகை செய்வதற்கு மட்டும் முணுமுணுக்கின்றார்கள். அந்த நகை தான் ஆபத்துக் காலங்களில் உதவுகின்றதென்பதை அனுபவத்தில் கண்டிருந்தும் அதைக் கவனிப்பதில்லை. ஓர் அவசரத்திற்கு ஒரு நகையை அடகு வைத்துப் பணம் வாங்கும் பொருட்டேனும் முக்கியமான நகைகளைச் செய்வது சகல விதத்திலும் அனுகூலமாகும்.

குச் சம்மதமா! 'இடருற்ற காலத்தில் மட்டும் கடவுளைத் துதிப்பார்; மற்ற நேரங்களில் துதியார்.' என்று பெரியார் கூறக்கேட்டதுண்டு. என்னறிவு எனக்குத் தெரிந்த நாள் முதலாக நான் அனுபவிப்பது என் விழியின் நீரை வெளியிடக் கூடிய அனுபவமே யன்றி வேறு விதத்தில் யான் ஒன்றுமறியாத பிறவிக் குருடாகிவிட்டேன். நான் இடைவிடாது அனவரதமும் பஜித்துக்கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா! இத்துஷ்டர்களிட மிருந்து என்னைக் காப்பாற்றமாட்டாயா!" என்று தனக்குள் எண்ணி அபாரமாகத் துதித்துக்கொண்டே கை குவித்துத் தொழுதவாறு ஒரு மூலையை நோக்கினாள். அவளே திடுக்கிட்டாள். "ஹா!" என்றும் வாய்விட்டலறிவிட்டாள். உடனே "என்னப்பனே! சங்கரா! நாராயணா! உங்களில் ஒருவருக்குப் படுக்கையாயும், ஒருவருக்கு ஆபரணமாயுமுள்ள பொருளை இங்கு அனுப்பி என்னைக் காக்கமுன் வந்தீர்களா!" என்று மனத்தில் எண்ணி கரங் குவித்தவாறே,—

புன்னாகவராளி

நாதர் முடிமேலிருக்கும் நல்ல பாம்பே!
நச்சுப் பையை வைத்திருக்கும் நாகப் பாம்பே!
பாதாளத்தில் குடிபுகும் பைக்குள் பாம்பே!
பார்த்துப் பார்த்து நின்று விளையாடு பாம்பே!
நீ ஆடு பாம்பே! தெளிந்தாடு பாம்பே — நா
குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்
கோரித் திருமாலுக்குக் குடையானாய்
கற்றைக்குழல் பார்வதிக்குக் கங்கணமானாய்!
கரையாமல் உறங்களித் தாடு பாம்பே — நா

என்ற பாடலைப் பாடி "என்னப்பனே! ஆதிசேஷா! அரவரசே! என்னை—இப்பாவியை—இத்தருணம் காப்பாற்றவேண்டும்." என்று

பொருள் ஒன்றை ஈடுகாட்டினாலொழிய எந்த விடத்திலும் கடன் கிடைப்பதில்லை. அவசரமான—மிக நெருக்கடியான—சமயம் பல சந்தர்ப்பங்களில் நேர்ந்துவிடுகின்றது. அப்போது மட்டும் அடகு வைப்பதற்கு நகை இல்லையே என்றால், எங்கிருந்து வரும்? தமது சக்திக்கு இயன்ற வளவு பொருள் கிடைத்த காலையில் நகைகளைச் செய்து வைத்தால் அதனால் அநேக நன்மைகளை யடையலாம்.

இவள் வாய் விட்டுக் கூறுவதையும் கண்ணீர் பெருகத் தொழுவதையும் கண்ட அவ்விருவரும் இவள் இவ்விதம் கூறுவதை யெல்லாம் ஏதோ விளையாட்டாக நினைத்துக்கொண்டு சுலோசனுவை ஒருவிதமாகப் பார்த்துக்கொண்டு "ஆகா! உனது நடிப்பு தான் வெகு அழகாக இருக்கிறதென்று::பார்த்தால், உனது கானமும் மதுரமாக இருக்கின்றதே! பேஷ் இப்படி யல்லவா இருக்கவேண்டும். திடீரென்று பாம்பாட்டிபாடலை ஏன் பாடவேண்டும். ஷோக்கான வேறு பாடலைப் பாடு கேட்கலாம்." என்றார்கள். அப்போது தான் டெலிபோன் மணி யடித்தது; அண்ணுசாமி அதனருகில் சென்று நாம் முன் தெரிவித்தது போல கோபியிடம் பேசினன்.

இதைக் கேட்ட சுலோசனு பொங்கி எழுந்த கோபத்துடன் பேசத் தொடங்கி "ஏ துர்ஜனர்களே! உங்களுடைய கள்ள மதிக்குக் கள்ள எண்ணமும், கபட யோசனையுந்தான் தோன்றும். அதோ! அந்த மூலையில் பாம்பு. அது என்னப்பன் ஆதிமூலத்தின் குடையாயும், சயனமாயும், சிவபிரானுக்கு பூஷணமாயும், என் அன்னை பார்வதியின் கைக் கங்கணமாயும் விளங்கும் ஆதிசேஷனுகையினுல் நான் கை குவித்துத் தொழுது பாடினேன். அதோ பாருங்கள்; படமெடுத்தாடுகிறது." என்று கூறினுள். இதைக் கேட்ட அம்மடையர்கள் 'பாம்பென்ருல் படையும் நடுங்கு மேன் பார்களல்லவா! அதனுல் நம்மை ஏமாற்றுவதற்கு இவள் இவ்விதம் கூறுகின்ருள்' என்று நினைத்து மேலும் ஏளனமாகவே பேசினுர்கள். பாம்பின் சீற்றமான தொனியைக் கேட்ட பிறகே அங்கு உண்மையில் பாம்பு இருப்பது நிஜமென்று அறிந்து அந்த மூலையை உற்று நோக்கினுர்கள். உண்மையாகவே நல்லபாம்பு படமெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு நடு நடுங்கிப் போய், "ஐயோ! பாம்பு!

எப்போதும் புனைசுருட்டும் பூதஞ்சியும் செய்கிற சுபாவமுள்ள மனிதர்களை எவ்வளவு திருத்தினுலும் அவர்கள் பிறவிக் குணம் போவதே இல்லை. "ஆ! எனக்கு அத்தகைய குணமில்லையே" என்பார்கள். அடுத்த வினுடியில் சாப்பிடக் கூப்பிட்டாலும் வாராமல் பட்டினியாகப் படுத்துக்கொள்வார்கள். சோற்றைப் பிறர்க்கு இட்டபின் "அப்பா! பசிக்கின்றதே" என்பார்கள். இதென்ன குணமோ தெரியவில்லை.

பாம்பு!" என்று பெருத்தக் கூக்குரலிட்டவாறு மூலைக் கொருவராக ஓடத் தலைப்பட்டார்கள்.

நமது சுலோசனு "இது தான் நான் தப்பித்துக்கொள்ளச் சரியான சமயம். கடவுள் என்னைக் காக்கும் பொருட்டே கருணை கர்த்து இங்கு பாம்பு வடிவமாக வந்திருக்கிறுர்" என்று எண்ணி அந்தப் பாம்பிருக்கும் திக்கை நோக்கி "நாராயணு! சம்போ! சங்கரா! ஆதிசேஷா! என்னுடைய ஆபத்தில் காக்க வந்த அருந்துணையான அநந்தா! என்னை என்றும் இவ்விதமாகவே காக்கவேண்டும்." என்று வேண்டி நமஸ்காரம் செய்தாள். அப்போது அன்னுசாமியும், சாம்சுந்தரும் அபாரமான பயத்தையும், திகிலையும் அடைந்து "பாம்பு! பாம்பு!" என்று தெருவில் ஓடி கூவ ஆரம்பித்தார்கள். சுலோசனுவின் மோட்டார் ட்ரைவர் வீதியிலிருந்து ஓடி வந்தான். அதே சமயத்தில் சுலோசனு மெல்ல வீதியில் நழுவி விட்டாள். தன் மோட்டார் ஓட்டியை அழைத்தாள். அவன் அந்த பாம்பு விஷயத்தில் சென்று விட்டானுகையினுல் வரவில்லை. சுலோசனுவுக்கே கார் ட்ரைவ் செய்யத் தெரியுமாகையினுல் வண்டியிலமர்ந்து தானே ஓட்டிக்கொண்டு போய்விட்டாள். வண்டி சிறிது தூரம் சென்ற பிறகே சுலோசனுவின் சுவாசம் சரியாக வரத் தொடங்கியது. அவள் அப்போதடைந்துள்ள மனக் கொதிப்பினுல் வண்டியை ஓட்டுகையில் ஒருவித ஆபத்தும் நேராவண்ணமாக இருக்கவேண்டுமே என்கிற கவலை ஒருபுறம் வதைக்கின்றது. எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணிக் கண்ணீர் சிந்தியவாறு, வண்டியை ஜாக்ரதையாக ஓட்டிக்கொண்டு தன் வீட்டை யடைந்தாள். "இன்று நேரிட விருந்த கண்டத்தினின்றும் என்னைக் காப்பாற்றிய அம்பிகே! ஆதி மூர்த்தியே!" என்று கூறிக்கொண்டு

காதலியை நினையாத காதலனில்லை. காதலனை நினையாத காதலி இல்லை. இருவருக்கும் மத்தியிலுள்ள சில குள்ள நரிகள், சுயநலப் புலிகள், வரும்படி தண்டும் கொள்ளைக்காரர்கள், ஆகியவர்கள் தத்தம் சாமார்த்தியங்களைக் காட்டி என்னவேலை செய்தபோதிலும் உண்மையான—உறுதியான—காதலையுடையவர்களை மாற்றமுடிவதே இல்லை. மேற்படியாரின் செய்கை பலனற்றதாகி விடுகின்றது; பலன் கிடைக்கும் இடத்திலுள்ளது உண்மைக் காதலாகமாட்டாது. கேவலமான............

உள்ளே சென்று சுவாமியை நமஸ்காரம் செய்துவிட்டுத் தன் படுக்கையில் படுத்தாள். வேலைக்காரனை விசாரித்ததில் கோபியை யாரோ ஒரு பெண்மணி வந்து அழைத்துச் சென்றாள் என்று தெரிந்தது. "ஆனந்தாவுடன் தான் சென்றிருப்பான்" என்று நிர்மானித்துக்கொண்டு படுத்துவிட்டாள். சமயல்காரி போஜனத்திற்கு அழைத்தும்தனக்குப் பசி இல்லை; வேண்டா மென்று கூறிவிட்டாள். ஏதேதோ பெருத்த யோசனை செய்துகொண்டே விசனத்திலாழ்ந்திருக்கும் சமயத்தில் ஒரு வேலைக்காரன் சுலோசனாவுக்கு ஒரு கடிதத்தைக் கொணர்ந்து கொடுத்துச் சென்றான். உடனே சுலோசனா அதை எடுத்துப் படிக்கலானாள்:—

மை டியர் சுலோசனாவுக்கு ராமசந்திரன் எழுதியது.

"நான் இக்கடிதம் எழுதும் நோக்கத்தை ஏற்கெனவே நீ அறியாமலிருப்பதால் திடுக்கிடலாம். என்னுடைய எண்ணத்தை நீ அறியாமலிருப்பது எனது துரதிர்ஷ்டமேதான். நீ என் தாயாரிடத்தில் மருத்துவ முறையில் பழகவந்த நாள் முதலாக நீ எனது இதயக்கோட்டையில் பதிந்துவிட்டாய். உன் மீது நான் கொண்டிருக்கும் அன்பிற்கு அளவே இல்லை. என் தாயார் தற்கால நாகரிகத்தில் ஈடுபட்டவளாகையினால் அவள் எதற்கும் தடையே கூறமாட்டாள். நீ விதந்து வாயிற்றே, என்று கவலைப்படவேண்டாம். அது அனுவசியம். நான் உன்னை மணந்துகொள்ளச் சித்தமாக இருக்கிறேன். நீ ஒருவிதமான யோசனையுமின்றி என்னை மணக்கச் சம்மதிப்பாய் என்று எதிர் பார்க்கிறேன். இக்கடிதத்திற்குப் பதிலை விவரமாக எழுது. அதையே எதிர் பார்க்கிறேன். இதனால் உனக்கு மனக் கலக்கம் உண்டாகாதென்று நினைக்கிறேன். உன்னை நான் பூர்ணமாகக் காதலித் திருப்பதற்கு அடையா

'ஊருக்குச் சென்ற உடனே கடிதம் போடு' என்று ஆயிரம் தரம் கூறி அனுப்பினாலும் சிலர் ஆகட்டுமென்று கூறிப் பின் கவனியாது இருந்துவிடுகிறார்கள். கடிதத்தை எதிர் பார்ப்போர் காரணமறியாது பல்வேறு சிந்தனைகள் செய்து வருந்துகிறார்கள். சென்றவுடன் அரையணா கடிதம் போட்டுவிட்டால் எவ்வளவு நன்மையாகிவிடும்? இதை அறிவதே இல்லை சிலர்.

ளம் உன்னைப்போலவே நானும் கதர் அணிந்துகொள்வதே யாகும். அவ்வழியிலும் நாம் ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டுமென்பதே எனது கோரிக்கை. சுலோசனு! இந்த கடிதம் நான் எழுதும் விஷயத்தில் கோபம்கொண்டு இதை என் தாயாரிடம் காட்ட நினைப்பாயோ! அவ்விதம் செய்வதால் என் தாயார் அதற்கு இடங்கொடுக்கமாட்டாள். உன்னையே வசம் செய்து எனக்கு மணத்தைச் செய்து வைப்பாள். என் தாயார் எனக்கு விரோதமாக எதுவுமே செய்யமாட்டார்கள் என்பதை நீ இங்கு பழகிய அனுபவத்திலிருந்தே தெரிந்து கொண்டிருக்கலாம். ஆகையினல் நீ இதற்கு உனது முழு அபிப்பிராயத்தையும் உடனே தெரிவிக்க வேண்டுகிறேன். இரவு பகலாக நான் உன் தியானம் செய்வதன்றி வேறு செய லறியேன்.

இங்ஙனம்
உன்னையே நம்பி இருக்கும்
ராமசந்திரன்."

என்ற கடிதத்தைப் படித்த சுலோசனு ஒன்றுமே தோன்ருமல் திடுக்கிட்டாள். "ஆகா! இதென்ன அனியாயம்! உடன்பிறந்த சகோதரனுக நான் பாவித்துவரும் ராமசந்திரனு இக்கடிதம் எழுதி இருக்கிருன்! ஐயோ! என்னுடைய பாபம் எல்லோருடைய மனத் திலும் இத்தகைய எண்ணத்தை உண்டாக்கிவிடுகிறதா! என்ன ஆச்சரியம்! நான் ஜனித்த அவகேடான நேரத்தை என்னென்பேன்? சிச்சி! ஏன் என்னை இத்தகைய பாழ்ப் பிறவியாக ஜெனிக்கச் செய் தார் கடவுள்!'' என்று மிக்க மனக் கலக்கத்துடன் புலம்பியவாறு படுத்திருந்தாள். அக்கடிதத்திற்குத் தான் என்னவிதமான பதி

நமக்கு வெகு ஆப்தமானவர்களிடமிருந்து கடிதம் வந்த உடனே அதைப் படிக்கும் ஆசைத்தத்தில் அப்போதே பதில் எழுத நினைக்கிறது மனம். அதற்கு அவ்வமயம் யாதேனும் தடை ஏற்பட்டுவிட்டாலோ, பிறகு காரண மின்றி எதிர்பாராத தடங்கல்கள் பல நேர்ந்து கடிதம் வரையவிடாதபடி செய்து விடுகின்றன. இன்று, நாளை எனப் பல நாள் சென்றுவிடக் கடிதம் எழுதவில்லை யென்கிற மனஸ்தாப வார்த்தை கிளம்பிவிடுகின்றது இவையெல்லாம் நம்மை யறியாத ஓர் வேடிக்கையாக நிகழ்ந்துவிடுகின்றன.

லளிப்பது என்பதே யறியாது குழம்பிப்போய் அதே யோசனையுடன் இருந்ததால் அந்த மன அதிர்ச்சி தாளாது அவள் மயக்கத்திலாழ்ந்துவிட்டாள்.

* * * * * *

விமலநாதனுடைய பந்துவர்க்கத்தில் சிலர், விமலநாதனைக் கண்டு பொறாமை கொண்டு அவனைக் கண்டிப்பதும் திட்டுவதுமாக இருந்தார்கள். வேங்கடம் ஒருவனே அவனுடைய சுகாசுகத்திற்குத் தக்கவாறு மறுமொழி யளித்துத் தேற்றுவான். பரிமளாவின் தாய் விட்டார் விமலநாதனின் நடத்தை சரியில்லை என்கிற தீர்மானத்துடன் அவனுக்குத் தாறுமாறான கடிதங்கள் எழுதுவதும் மனஸ்தாபப்படுவதுமாக இருக்கிறார்கள். அவர்களை யவன் லக்ஷியமே செய்யவில்லை. பரிமளா தன்னுடைய கணவனின் ரகஸியம் தெரிந்திருந்தும் அதைப்பற்றி அவனிடத்தில் சாதகமாகவோ பாதகமாகவோ எதையும் பேசாது அவன் இஷ்டப்படியே நடந்து அவனுடைய பிரியத்தை சம்பாதிப்பதிலேயே நாட்டமாக இருக்கிறாள். ஆகையினால் எந்த விஷயத்திலும் அவளிடத்தில் குறைகூற இடமில்லாதுபோய்விட்டது. விமலநாதனின் குடும்பத்தில் சம்மந்தமில்லாத அன்னியர்களெல்லாம் விமலநாதன் சுலோசனாவிடத்தில் கள்ள நட்பு கொண்டிருப்பதாக அவனைத் தாறுமாறாகத் திட்டுவதும், நேருக்கு நேராக எதிரிலேயே கேட்பதுமாக ஆரம்பித்தார்கள். அவர்களில் சிலர் விமலநாதனுக்கு அறிமுகமானவர்கள். அந்த புண்யாத்மாக்கள் விமலநாதனுடன் அடிக்கடி பேசுபவர்கள். அவர்கள் சுலோசனாவைப்பற்றி எப்போதும் விமலநாதனிடத்தில் மிகவும் இழிவாகவே பேசி அவன் மனத்தைப் புண்படச் செய்

“ஆகா! என்னுடைய ஆப்தமித்திரர் என் வீட்டில் அன்னம் புசித்தது ஒரே ஒரு நாள் இரவிலல்லவா! அந்த நாளைய தேதி என்னினைவில் உண்டாகவும் அன்று விருந்து நடந்த சம்பவங்கள் முற்றும் கண் முன் தோன்றுகின்றன. என் மித்திரரும் நானும் கூட உட்கார்ந்து போஜனம் செய்ததும் அக்காலை நிகழ்ந்த சம்பாஷணைகளும், இப்போதுதான் நடைபெறுவனபோல விருக்கையில், அதே மித்திரரும் நானும் பிரிந்து போய் எக்காலமாய்விட்டது, ஹா! என்ன ஆச்சரியம்!” என்று கண்ணீர் உதிர்க்கிறார் ஒரு நண்பர்,

வார்கள். இவைகளை எல்லாம் கேட்ட விமலநாதன் அவர்களுக்கு எதுவுமே பதில் கூருது இருந்துவிடுவான்.

இவ்வாறே சில நாட்களாயின. மேற்குறித்த நண்பர்கள் தமது பாடலை விடாது "சுலோசனு அப்படி; இப்படி; அத்தகைய தித் தொழிலைப் புரிகிருள்" என்ற பாடத்தை பாடிக்கொண்டே அதை மேன்மேலும் விருத்தியடையச் செய்துகொண்டே இருந்தார்கள். விமலநாதன் அதற்குமேல் தாங்க முடியாமல் சீற்றங்கொண்டு எதிர்த்துப்பேசி அனுப்பிவிடுவான். இதனுல் சண்டை சச்சரவுகளும் உண்டாயின. ஒரு நாள் அந்த கூட்டத்தில் சேர்ந்த சோதா ஒருவன் வந்து விமலநாதனை நேராகவே நோக்கி "என்ன சார்! உங்கள் மீதுள்ள புகார் வெகு மும்முரமாக விருக்கிறது. இந்த விஷயம் சிறிய கிராமங்களிலும் பரவிவிட்டது. உங்களுடைய பெயருக்கும் புகழுக்கும் இவ்விதமிருப்பது சிறிதும் பொருந்தாது; நகைப்பிற்கு இடமாக இருக்கிறது. அந்த சுலோசனுவைப்பற்றிய விஷயங்களோ ஆபாஸமாக இருக்கின்றன. எந்த வீட்டிலும் அவளைப்பற்றிப் பேசாமலில்லை. அந்த இழிவான வார்த்தையைக் கேட்கவே கூடவில்லை. அவளுடைய நடத்தையே சரியில்லை என்று யாவரும் தூற்றி நகைக்கின்றுர்கள். நீங்கள் அத்தகைய கழிபட்ட வளையா, நாடகக்காரியையா இச்சித்தலையவேண்டும்? நான் ஏதோ சிநேகித விஷயமாக உங்களிடம் இவ்விதம் தாராளமாகப் பேசுகிறேன். உங்களுடைய புகழ் நிலைக்கவேண்டுமாயின் நீங்கள் அந்த எண்ணத்தை அறவே விடுங்கள். உங்களுடைய காரியம் உங்களுக்கு நன்ருக இருப்பதாகத் தோன்றலாம். அதைப்பற்றி ஊர் ஜனங்கள் என்ன சொல்கிருர்கள் என்பதை நீங்களறியமாட்டீர்கள். ஆகையினுல் நான் கூறுகிறேன். அந்தப் பெண் சினிமாவில் நடிப்பதும் இன்னும் மற்ற விஷயங்களெல்லாம் சுத்தப்பொய் என்றே நானும் முதலில் நினைத்தேன். பிறகு நானே கண்டு தெரிந்து

"உன்னை எத்தனை தரம் பார்த்தாலும் புதிய புதிய எழிலுடன் விளங்குகின்ருயே! என் கண்மணித் தோழி! உனக்கு அழகைக் கொடுத்த ஈசன் அதிர்ஷ்டத்தைக் கொடுக்காது பாழாக்கிவிட்டானே! இதற்கா நீ இப்பூவுலகில் ஜனித்தாய்? என்ன கொடுமை, என்ன விதி!"

கொண்டேன். அவளுடைய டாக்டரின் மகன் ராமசந்திரனாலேயே தெரிந்துகொண்டேன். ராமசந்திரனுக்கு தேசிய விஷயமென்றால் சற்றும் பிடிக்காது; சீறிவிழுவான். அத்தகையோனே இப்பொழுது கதரைத் தவிர வேறு அணிவதில்லை. தேசிய மீட்டிங்குகளுக்கும் போகிறான். அவன் அவ்வாறு மாறுதலையடைந்தது அவனுடைய காதலியின் உபதேசமாகத்தான் இருக்குமென்று நன்கு தெரிந்து விட்டது. அவனையே சுலோசனா விவாகமும் செய்துகொள்ளப் போகிறாள் என்றும் ஒரு வதந்தி கிளம்பி இருக்கிறது. உங்களுக்கு அத்தகைய சனியன்களின் நேசம் எதற்கு? அவள் சினிமாவில் நடிப்பதற்காகப் படம் எடுக்கையில் நான் கண்ணால் பார்த்தபிறகே எனக்கு நிச்சயமாயிற்று.'' என்று அவன் சொல்லிக்கொண்டே வருகையில் விமலநாதனுக்கு கேட்கக்கூடாத ஆத்திரமும் வருத்தமும் ஒன்றுகூடிவிட்டன. அவைகளை வெகு கஷ்டப்பட்டு உள்ளடக்கிக் கொண்டு பேசத் தொடங்கி, "ஏன் சார்! நீங்கள் சொல்லிய யாவும் உண்மை என்பதை எனக்கு நிரூபித்துக் காட்டுவீர்களா! அதன் பிறகு உங்களுக்குப் பதில் கூறுகின்றேன். அவ்வாறு நீங்கள் காட்டாவிடில் என்னுடைய சீற்றத்திற்கு நீங்கள் ஆளாக நேரும்'' என்றான்.

வந்தவன்:—இதென்ன இவ்விதம் பேசுகின்றீர்கள். நான் கண்ணால் கண்ட விஷயங்களை நான் கட்டாயம் காட்டுகிறேன். நீங்கள் கூறுவதை நோக்கின் அவள் மகா உத்தமி என்று நீங்கள் நிரூபிப்பீர்கள் போன்றிருக்கின்றதே!

விமல;—அந்த விஷயங்களை எல்லாம் உம்மை நான் கேட்கவில்லை. நீர் சொல்லியபடிக்கு நடக்கத் தயாராக இரும். என்று காட்டுகிறீர்கள்?

வந்த:—அதைக் கூறவும் வேண்டுமோ! தினந்தோறுந்தான்

உன்னைக் காணுந்தோறும் என் உள்ளம் உருகுகின்றதே! உன்னை நான் எதற்கென்று எண்ணித் துயருறுவேன்? எத்தனை நேரம் வருந்தினாலும் மணமில்லாத கனகாம்பரத்திற்கு மணத்தை யுண்டாக்க முடியுமா? அதுபோன்றல்லவா உன் முடிவு ஆய்விட்டது.

நடிக்கின்றாள். ஆனால் அவைகள் கம்பெனியின் உள்ளேயே இருக்கலாம். கடற்கரையில் நடிக்கின்ற அன்று உங்களை நான் அவசியம் அழைத்துச் செல்லுகிறேன். இப்போது என்னோடு வந்தீர்களானால் டாக்டரின் மகன் சுலோசனாவின் வீட்டிலேயே இருப்பதைக் காட்டுகிறேன்—என்றான். இதைக் கேட்டதும் விமலநாதனே திடுக்கிட்டான். அத்தகைய திடமான மனமும் சடக்கென்று குழம்ப ஆரம்பித்தது. அவன் மனத்தில் சகிக்கொணாத சித்திரவதை உண்டானது. "இவன் சொல்வது ஒருகால் உண்மையாகவே இருக்குமோ!" என்று சற்று சந்தேகமும் உண்டாகிவிட்டது. அவைகளை உள்ளடக்கிக்கொண்டு "சரி; கிளம்பு போவோம்" என்று கூறி அந்த மனிதனுடன் புறப்பட்டு நேரே சுலோசனாவின் வீட்டிற்கு எதிரில் வந்து நின்றார்கள். இவர்கள் நின்ற அதே தருணத்தில் ராமசந்திரன் சுலோசனாவின் வீட்டிலிருந்து வெளி வந்து தன் வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தான்.

இதைக் கண்ட வந்த மனிதன் "அதோ பார்த்தீர்களா! போகும் மனிதன் ராமசந்திரனல்லவா! அவனுடைய உற்சாகம் எவ்வித மிருக்கிறது பார்த்தீரா! வெகு நேரத்திற்கு முன்னாலேயே அவன் இங்கு சென்றதைப் பார்த்தபிறகுதான் நான் உம்மிடம் தெரிவித்தேன். சந்தேகம் நிவர்த்தியாயிற்று! இந்த அகாலத்தில் அன்னிய ஆடவன் இங்கு வந்து இத்தனை நேரம் தங்கி இருந்து செல்லவேண்டிய காரியம் யாது கூறுங்கள். இதிலிருந்தே அவளுடைய யோக்யதை தெரியவில்லையா!" என்றான்.

இதைக்கேட்ட விமலநாதனின் மனமும் வயிறும் துடிக்கின்றன. அந்த மனிதன் இச்சமயம் இங்கு எதற்காக வந்து விட்டுச் செல்லவேண்டும். ஒருகால் அது உண்மையாக விருக்

வெளி நாட்டிலுள்ள ஒருவர், ஒரு பத்திரிகைக்கு முழு சந்தா செலுத்த மனம் வாராமல், அப் பத்திரிகையின் பத்திராதிபருக்கு வேண்டியவரான ஒரு கனவானிடம் சென்று எட்டணா குறைவாகக் கொடுத்து, "எவ்விதமாவது பத்திரிகை தருவித்துக் கொடுங்கள்" என்கிறார். அக் கனவானும் தர்மசங்கடத்தில் சிக்கிப் பத்திராதிபருக்கு அந்த பணத்தை யனுப்பி, அதை முழு

குமார்? சிச்சி! சுலோசனுவின் மீதா நாம் இத்தகைய சந்தேகங்கொள் வது. இதென்ன எண்ணம்! எதற்கும் நேரில் சென்று பார்க்கலாம்.'' என்று எண்ணியவனுய், அவனிடத்தில் ஏதும் பேசாமல் "சரி வாரும்; செல்வோம்'' என்று தன் வீடு வரையில் சென்று அம் மனிதனை அனுப்பிவிட்டு நேரே சுலோசனுவின் வீட்டிற்கு வந்து பார்த்தான். அவ்வமயம் சுலோசனு அபாரமான விசனத்துடன் கண்ணீர் பெருக்கியவாறு படுத்திருப்பதைக் கண்ட விமலகாதனின் மனம் உருகிவிட்டது. அவன் சந்தடி செய்யாது சற்று நேரம் நின்றுன். பிறகு அருகில் சென்று தன் கைக்குட்டையினுல் சுலோசனுவின் கண்ணைத் துடைத்தவாறு "மை டியர் சுலோசனு! இதென்ன கோர சம்பவம்? ஏனிப்படிப் புலம்புகின்ருய்?'' என்று கேட்டவாறு அருகிலேயே அமர்ந்தான்.

இந்த எதிர்பாராத சம்பவத்தினுல் மனந் திடுக்கிட்ட சுலோசனு சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, ஒன்றுமே தோன்ருது கலவரத்துடன் நோக்கினுள். தான் என்ன பதில் சொல்வதென்றே அறியாது தம்பித்துவிட்டாள்.

விமல:—சுலோசனு! ஏனிப்படிப் பார்க்கின்ருய்! என்ன செய்தி நடந்தது. நீ எக்காரணம் பற்றி இவ்வாறு விசனிக்கின்ருய்! அதை உடனே தெரிவி.

சுலோ:—(விசனித்தவாறே பேசத் தொடங்கி) மை டியர்! நான் விசனிப்பதற்குக் காரணமும் கூறவேண்டுமா! என் விஷயத்தில் கடவுள் சோதியாத விஷயங்களும் உண்டா! இதோ இக் கடிதத்தைப் படித்துப் பாருங்கள். விஷயம் தெரியலாம்—என்று கூறி ராமசந்திரன் எழுதியிருந்த கடிதத்தை விமலகாதனிடம் கொடுத்தாள்.

சந்தா வந்ததாக எண்ணிப் பத்திரிகை யனுப்புமாறு வேண்டுகிருர். பத்திராதிபரும் அப்படியே பத்திரிகையை அனுப்ப, இவ்விதமாக எட்டணு லாபம் பெற்ற மனுஷ்யரோ அடுத்த நிமிஷம் தாசி, காபிஹோட்டல் வகைக்கு எட்டு ரூபாய் செலவிடவும் தயாராகி விடுவதை என்னென்பதோ? நல்ல சங்கதியில் தான் சேட்டு காட்டுவேது வழக்கம்.

விமலநாதன் அக் கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு அடங்காத வியப்பும், திகைப்பும் கொண்டான். ராமசந்திரன்மீது ஆத்திரம் பொங்கியது. பின் சுலோசனாவை நோக்கி "என் அன்பான சுலோசனா! இக் கடிதத்தை எழுதிய மனிதனின் வஞ்சகத்தை நீ சற்று மறியமாட்டாயா! அதை யறியாமலேயே மோசம் வந்து விட்டதே! இதற்குப் பதில் என்ன எழுதினாய்?" என்றான்.

சுலோ:—என்ன பதில் தான் எழுதுவது என்பதே தெரியாமல் பேசாமலிருந்துவிட்டேன். என்னுடைய பாழ்ப் பிறவியை நான் நோகாத நேரமுண்டா! நேற்று ஓர் பெருத்த ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கையில் ஆதிசேஷனால் விடுதலைப் பெற்றேன்; (நடந்த வரலாற்றைக் கூறினாள்) அங்கிருந்து தப்பித்துக் கொண்டுவந்து அதே விசாரமாக உட்கார்ந்திருக்கையில் இந்தப் பாழும் எமனோலை வந்து சேர்ந்தது. இதைக் கண்டு நேற்று இரவு முற்றும் தூங்காது புலம்பினேன். இன்று ஆல்பத்ரிக்குச் சென்று வந்தபிறகு, எங்கும் செல்லாது ஒரு வேலையும் கவனிக்காது படுத்துவிட்டேன். என்னுடைய மனத்திலுண்டாகிய சங்கடத்தைக் கூறவே சாத்தியமன்று. நான் இப் பாழுங் கடிதத்திற்குப் பதிலே எழுதவில்லை. இப்போதே சற்று முன்னர் அந்தப் பாவி இங்கு வந்தான். அவனைக் கண்டதே என் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. "இந்த சனியன் இங்கு என் வந்தான்" என்று எண்ணி நடுங்கினேன். நான் எனது உடன் பிறந்தவன் போன்று பாவித்த மனிதன் இவ்விதம் வித்யாசமாக எண்ணிவிட்ட வயிற்றெரிச்சலைத் தாங்கவே கூடாமல் தவித்தேன். அக் கடிதத்திற்கு பதில் என் தரவில்லை என்றும், தன்னை மணக்காவிடின் எனக்குப் பல துன்பங்கள் நேருமென்றும், எனக்கு எத்தனையோ அபார்ஷன் ஆகியதாக

"அமைப்பு" என்பது எல்லோருக்கும் பொருந்திவிடாது. பிச்சடை போட்டுக்கொள்வது சிலருக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. சிலருக்கோ பார்க்கக்கூடாத விகாரமாக இருக்கிறது. சில சேலைகள் சிலருக்குத்தான் நிரம்பவும் அழகாக இருக்கின்றன. அதே சேலையை வேறு சிலர் உடுத்தினால் கோரம் கூத்தாடுகின்றது. இவ்விதமே ஒவ்வொன்றிற்கும் அமைப்பு ஓர் தனித்தவாறு அமைகின்றது. அவரவர் செய்த அதிர்ஷ்டத்திற்கேற்ப அது!

வும் தன் தாயாரே அதைக் கண்டதாகவும் விளம்பரம் செய்து மானத்தை வாங்கிவிடுவதாயும், நான் நன்றாக மானத்துடன் ஜீவிக்கவேண்டுமாயின் தன்னை மணக்க இசையவேண்டுமென்றும், இன்னும் ஏதேதோ வாயில் வந்தவாறு உளறினான்.

அவைகளுக்கெல்லாம் நான் தனித்தனியே விடை பகராது "என் மானத்தை நீங்கள் வாங்கும் பரியந்தம் என் ப்ராணன் இவ்வுலகில் நிற்காது. என் சவத்தை வேண்டுமானால் உங்கள் மனம் போல மானத்தை வாங்கலாம். அதற்கும் என் கோபி அதை உங்கள் கண்ணில் காட்டமாட்டான். ஒரே வார்த்தையாக விடை கொடுத்தேன்; இனி எழுந்து செல்லலாம். என்னுடைய மனச் சாக்ஷியைக் கடவுள் அறிவார். அதை கேவலமான மனிதரறியவேண்டியது அனாவசியம்" என்று ஒரே விடையாகக் கூறினேன். அதற்கு மேல் அவன் ஏதும் பேசாது மவுனமாகப் போய்விட்டான். காரணம் யாதோ! நானறியேன். என்னுடைய போதாக் காலத்தின் கொடுமையே என்னை இவ்விதமெல்லாம் ஆட்டுகிறது" என்று கூறி அபாரமாகப் புலம்பினாள்.

இது கேட்ட விமலநாதன் மிக்க விசனத்தை படைந்து "மை டியர்! நீ இதற்காக வருந்தாதே! கடவுளை நம்பிய எவர்க்கும் நற்கதி கிடைக்காது போகாது. உன்னுடைய பரிசுத்தத்தைக் கெடுக்க நினைக்கும் பாவிகளை அந்த சர்வேசனே பார்த்துக்கொள்வான். நீ வீணாகக் கவலைப் படாதே! உன்னை வேண்டுமென்றே கெடுப்பதற்காகச் சிலர் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதை நான் பல விதத்திலும் பார்த்திருக்கிறேன். உன்னை இப்போதே

ஒருவர் பாடிய புதிய பாட்டைக் கேட்ட எல்லோரும் அதைப் பாடிவிட வேண்டுமென்று மிக்க ஆவலுடன் அப்பாட்டைப் பாடம் செய்து அதைக் கொலை செய்துவிடுகிறார்கள். ஒரே பாட்டு எல்லோருக்கும் நன்றாக அமைவதே இல்லை. ஆபாசமாகப் பாடியதைக் கேட்டுவிட்டால் அப்பாட்டுக்கே உள்ள அழகு குன்றிவிடுவதுபோலத் தோன்றுகின்றது. பிறகு நன்றாகப் பாடுகின்றவர்களுக்கும் அப்பாடலின்மீது ஒரு வெறுப்பு உண்டாகிவிடுகின்றது. யார் யார் எந்தெந்தப் பாட்டுப் பாடினால் நன்றாக இருக்கும் என்கிற யோசனையே இன்றிப் பாடலைப் பாழ்படச் செய்துவிடும் வயிற்றெரிச்சல் தாங்க முடியாதது.

கொன்றுவிடவும் சில சண்டாளர்கள் காத்திருக்கிறார்கள். ஏன், நம்மிருவர் மீதும் கடும் பகைகொண்டுள்ள கிராதகர்கள் ஒருவரிருவ ரல்ல. அவர்கள் கண் முன்னால் நாமிருவரும் சவமாகக் கிடந்து அவர்கள் கண் குளிரப் பார்த்தால் மெத்த சந்தோஷமாகிவிடும். இந்த விஷயங்கள் எனக்குத் தெரியா தென்று நினைக்காதே! உன்னைக் கெடுப்பதற்கே மனிதர்கள் முன்னின்று உழைக்கிறார்கள். அவர்கள் யார் என்பதுவும் எனக்குத் தெரியாமலில்லை. துஷ்டர்களை சம்ஹரிப்பதற்கு எம்பெருமான் இல்லையா! அவன் இருக்கையில் நாம் ஏன் இதில் பிரவேசிக்கவேண்டும் என்று வாளா விருக்கிறேன். உன் மீது கூறும் அபாண்டம் ஒன்றிரண்டல்ல. போதாக் காலத்தின் கொடுமையே இவ்வித மிருக்கிறது. நீ இனி அந்தப் பாவிகளிடத்தில் பேச்சு வைத்துக்கொள்ளாதே! கபடமே நிறைந்த கலியின் கூற்று செய்வது ஒன்றிரண்டல்ல. மனம் கலந்த சிநேகிதர்கள் ஒருவரோடொருவர் பழகுவதையும், பாடி மன மகிழ்வதையும் வீட்டிலிருக்கும் உறவான கொள்ளிகளும், குடி இருக்கும் கபடக் கொள்ளிகளும் கண்டு சகியாது வயிறெரியும் காலமாயிற்றே! வீட்டுக்காரர்களுக்கு அனுகூலமாகவே இருப்பது போல இருந்து கொண்டே அவர்கள் தலைக்குக் கொள்ளி வைக்கும் குடித்தனக் காரர்களின் சகவாசம் நல்ல பாம்பிற்கு ஒப்பல்லவா ஆகும்! தமக்குச் சிறிதும் சம்மந்தமே இல்லாத விஷயங்களில் தலையிடுவதும், வீட்டுக்காரர்களுக்கு வரும் கடிதத்தைத் திருட்டுத்தனமாக அபகரித்துப் படிப்பதும், அவர்களுடைய விஷயங்களை மறைந்து கவனிப்பதுமான அரோக சிந்தையை உடையவர்களை இக்காலத்தில் கண்ணெதிரில் பார்க்கிறேன். அத்தகையோரே வெகு நல்லவர்கள் போல நடித்து" உள்ளே வயிறெரிய உதடு பழம் சோரிய" என்ற பழமொழிப்படி நடக்கின்றார்கள். உன் விஷயத்தில் தீது செய்வதற்குக் கேட்கவேண்டுமா! உனக்கும் எனக்குமுள்ள நேசத்தைக் குலைப்பதற்காக உன்மீது பல குற்றங்களை எனக்கு எடுத்துரைத்துக் கலைக்க வரும் கொள்ளிகள் கணக்கில்லை. ஆகையினால் இனிமேல் ஜாக்ரதையாக இரு. அவன் கூறுவதெல்லாம் வெறும் மிரட்டலே யொழிய வேறில்லை. இதற்கெல்லாம் நீ கண்ணீர் சிந்திக் கவலைப் பட்டுக்கொண்டிருந்தால் நீ கொண்டுள்ள தொழிலுக்கு வெகு கெடுதலாயிற்றே! அதைக் கவனிக்கவேண்டாமா! சுலோசனா! நிறைந்த மனித திக்குள்ளவர்களுக்கே அளப்பரிய இடர்கள் பிறரினால் உண்டாகின்றன. கேவலம் உன்போன்ற திக்கற்ற அனாதைகளின் நிலைமையைக் கூறவேண்டுமா!

தடபுடலாக மரியாதை செய்யும் இடத்திலும் சொட்டைச்சொல். மரியாதையே இல்லாத இடத்தில் கேட்கவே வேண்டாம். ராஜாங்கத்தில் சென்று பார்த்தாலோ, அப்பப்ப! அந்தப் பாடம் கூறத்தரமன்று. உலகமே குறை கூறும் தா முடையது.

சலோ:— மை டியர்! நான் கவலைப் படுவதும் கண்ணீர் சிந்து வதும் இவ் வுலகத்தில் இரு உயிர்களை வதைத்துச் சங்கடத்தி லாழ்த்துகின்றதே யன்றி மற்ற யாருக்கும் இதைப் பற்றிக் கவலையே இல்லை. என்னுடைய சினேகிதைகள் தற்போது அருகில் இருப் பார்களானால் அவ்விரு உயிர்களுடன் சேருவார்கள். சலோசனு ஏதோ சௌக்யமாக இருக்கிறாள் என்று மட்டும் எண்ணி இருக்கி றார்கள். எனக்குள்ள துன்பத்தை வரைந்து அவர்களை விசனத்தில் மூழ்கச் செய்வதற்கு எனக்குப் பிடிக்கவில்லை. நான் என்ன செய் வேன்.......பலவிதமான துன்பத்திற்குத் துணையாய் ஜெனித்த நான் ஏன் இன்னும் பூவுலகத்தில் இருக்கவேண்டும்? என்னுடைய ஆயுளை ஏன் கடவுள் இவ்விதம் வளரச் செய்யவேண்டும். அந்தப் பாவிகளின் பயமே எனக்கு மிக்கப் பெரிதாக இருக்கிறதே! சமயத்தில் அந்த சர்ப்பம் வந்துக் காப்பாற்றி இல்லாவிடின் என் கதி யாதாயிருக்கும். ஐயோ! நினைக்கின் பகீர் என்கிறதே!

விமல.—ஆ! என்ன வார்த்தை சொன்னுய்! இதைக் கேட் கவோ நான் தவம் செய்கிறேன். என் அன்பான சலோசனு! உனக்கு ஒருவிதமான ஆபத்துமின்றிக் காக்கும்பொருட்டுக் கடவுள் என் மனத்தில் எத்தனையோ உயரிய ஊக்கத்தை அளித்திருக்கிறார். உன்னை ஒருவித விபத்தும் அணுகாவண்ணம் பார்த்துக்கொள்ள நான் படும் பாடு அக்கடவுளுக்குத்தான் தெரியும். என்ன செய் வேன்! எதற்கும் பயப்படாமல் நீ தைரியமாக இரு. இதைத்தான் நான் உறுதியாகக் கூறுவேன்.—என்று கண்ணீர் பொழியக் கூறி சோகத்தில் ஆழ்ந்துவிட்டான். ஏதோ பேசுவதற்கு வாய் எடுக் கின்றான்; உடனே நிறுத்துகிறான். இவ்விதம் தத்தளிக்கையில் மணி யடித்தது. "ஐயோ! இன்னும் வரவில்லையே" என்று வீட்டில் தேடிக் கொண்டு வந்துவிடுவார்கள். நான் சென்றுவரட்டுமா! வருத்த முறாதே! கடவுளையே நம்பி இரு. நீ நன்றாக யோசித்துப் பின் அந்த விஷயத்தை அவன் தாயாரிடத்தில் தெரிவி" என்று கூறித் தேறுதல்கள் கூறிவிட்டு அவளிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு போய்விட்டான். அவன் மனம் நிலையிலடங்காது தவித்து உருகி தத்தளிக்கின்றது. தனிமையில் கிடக்கும் சலோசனு விச னத்தினுல் சவம்போலச் சாய்ந்துவிட்டாள். இவ்விஷயங்களைத் தன் டாக்டரிடத்தில் கூறுவதா, வேண்டாமா! என்கிற விஷயமே மனத்தில் போராடிக்கொண்டிருந்தது. "அவசரப்பட்டு எதையும் தெரிவித்தல் கூடாது. இன்னும் பொறுத்துப் பார்ப்போம்" என்று சற்று தேற்றிக்கொண்டாள்.

* * * *

ஒரு பெண்ணை முதலில் பார்த்தபோது இது கருப்பு வேண்டா மென்ற பிறரு அதே பெண் தன் வீட்டில் வாழ்க்கைப் பட்டுவிட்டாலோ ரம்பையாகி விடுகிறான். "அப்போது கருப்புப் போல தோன்றியவள், இப்போது ராஜாத்தி போன்று விளங்குகின்றாளே!" என்கிறார்கள் சிலர்.

21027

இவ்விதமே பின்னும் சில தினங்களாயின. விமலநாதன் ஏதோ ஒரு முக்கியமான கேஸ் விஷயமாக வெளியூருக்குச் சென்று திரும்பினான். அன்று சுலோசனா வீட்டிற்குச் சென்றுவர உத்தேசித்துப் புறப்படுகையில் விமலநாதனுக்கு அனுகூலமாக வேண்டியவன் ஒருவன் வெகு விரைவாக விமலநாதனிடத்தில் வந்து "என்ன லாயரே! நீங்கள் முன்பொரு சமயத்தில் சுலோசனாவுக்கு ஒருவருமே திக்கில்லை; அனாதைப் பரதேசி என்று கூறினீர்களே! இப்போது நான் கடற்கரையில் மேளக்கச்சேரி கேட்டுக்கொண்டிருக்கையில் சற்று தூரத்தில் பேரிரைச்சலுடன் ஜனக்கூட்டம் திரளாக இருப்பதைக் கண்டேன். நானும் எழுந்து சென்று பார்க்கையில், டாக்டர்! சுலோசனா அங்கு உலாவ வந்ததாகவும் திடீரென்று மயக்கமாக விழுந்துவிட்டார்கள் என்றும் கூறி, "இவர்களின் சொந்த மனிதர்கள் யாருமில்லையா!" என்று கேட்டார்கள். நான் அருகில் செல்வதற்குள், இரு ஆண்பிள்ளைகள் அங்கு ஓடி வந்து "ஹா! என்னருமை சுலோசனா! நான் அப்போதே வெளியில் போகவேண்டாம் என்று கூறினேனே; கேட்காது வந்து விழுந்துவிட்டாயே" என்று கூறிக்கொண்டே வெகு விரைவில் வந்து அவர்களைத் தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டார்கள். வண்டி புறப்படுகையில் அதில் ஒரு பெண் பிள்ளையும் கூட ஏறியதாகத் தெரிந்தது. அது சரியாகக் கூற முடியாது. அந்த மனிதர்கள் யார்? என்று அவன் கூறியதைக் கேட்ட விமலநாதனின் இருதயம் வெடித்துவிடும்போலாய்விட்டது. "ஹா! என்ன! என்ன! சுலோசனாவை இருவர் தூக்கிச் சென்றார்களா! அது உண்மைதானா! ஐயோ! அவ்விரு பாவிகளுந்தான் வந்துவிட்டார்களோ! எந்த இடத்தில் இந்த சம்பவம் நடந்தது என்பதை என் கூட வந்து காட்டுகிறீரா!" என்று கூறிக்கொண்டே உடனே தனது மோட்டாரைத் தயார் செய்து அதில் அம்மனிதனையும் ஏற்றிக்கொண்டு மனத்தில் பலவிதமான எண்ணங்கள் தோன்றி வதைத்தவாறு வெகு வேகமாக காரைத் தானே ஓட்டிக்கொண்டு கண்ணீர் பெருக்கியவண்ணம் திகிலுடன் போகிறான். அவன் மனோ வேகத்திற்குச் சரியாக அந்த வண்டி ஓடவில்லையே என்ற வருத்தத்துடன் ஓட்டுகையில் மத்தியில் ரயில் கேட்டு வந்துவிட்டது. அப்போதே ரயில் வருவதால் கேட்டு மூடப்பட்டிருந்தது கண்டு "ஐயோ! இந்த தடையும் இப்போதுதான் வரவேண்டுமா!" என்று கலக்கமே வடிவமாய்க் கல்லாய்ச் சமைந்துவிட்டான்.

தன் கைக் காசு செலவின்றி இனாம் டிக்கட்டில் தினம் ஒரு நாடகத்திற்குப் போனாலும் அது தப்பிதமில்லை; காசு கொடுத்துக்கொண்டு போகிறவர்கள் மேல் தப்பிதம் கூறுவது எந்த தரும நியாயமோ தெரியவில்லை.

"ஜகன்மோகினி" யில்
வெளிவந்த நாவல்கள்.

மலர் I. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை				
	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
மலர் VII.	சாருலோசனை (2 பாகங்கள்)	ரூ.	1	12	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	ருக்மிணீ காந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவலந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
சாருலோசனை	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் — தபாற்செலவு — இனாம்

இரண்டு அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

மதனசிங்கர்	ரூ.	1	0	0.	மர்மமுகி	ரூ.	0	12	0
சுந்தரவதனி	ரூ.	0	12	0	வஸந்தசமுத்ரம்	ரூ.	0	12	0
மஞ்சுளா	ரூ.	0	6	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வத்ஸா [illegible] கம்பெனி, திருவல்லிக்கேணி.